"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

# காரை ஆதித்தியன்

காலாண்டு சஞ்சிகை

தலைமை அலுவலகம் : Karai Aathiththiyan, Thambiah Dayaparan B.A, Postlagernd, 4102 Binningen-1, Switzerland.

விரோதி வருடம் ஆவணி மாதம் 2010 திருவள்ளுவர் ஆண்டு 2040 பக்கங்கள் - 22 விலை ரூபா

KARAIAATHITHTHIYAN TAMIL QUARTLY சுடர் 15

பதிப்பு Registered as a Paper at The G.P.O e.mail: karaiaathiththiyan1@msn.com



முரளிக்கு
காரைஆதித்தியனின்
வாழ்த்துக்கள்



# அபிவிருத்தியை நோக்கி காரைநகர்



## இரண்டாவது தண்ணீர் தாங்கி துவக்க விழா



காரை தோப்புக்காடு பாடசாலைக்கு
லண்டன் ந.பு.சங்கம் அன்பளிப்பு



## காரைநகருக்கு புதிய தலைவர்



காரை ஆதித்தியன்
காலாண்டு சஞ்சிகை

POSTLAGERND 4102 BINNINGEN-1
SWITZERLAND

# பல கோடி ரூபா செலவில் கிட்டங்கி பிள்ளையார்

காரைநகர் துறை முகத்தில் அமைந்துள்ள சிட் டங்கி பிள்ளையார் கோவில் கடந்த கால யுத்தத்தினால் பாதிப்படைந்தமை யாவரும் அறிவீர். தற்போது ஏற்பட்டு சூழ்நிலையில் அவற்றை புணர்நிர்மாணம் செய்ய இலங்கை உட்பட வெளிநாடு களில் வாழும் பக்தர்கள் பல கோடி ரூபாய்களை கொடுத் துள்ளார்கள்.

## சிறு செய்திகள்

தஞ்கை பெரிய கோவில் கட்டப்பட்டு ஆயிரம் ஆண்டு கள் நிறைவடைந்துள்ளன.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தினால் தமிழ் பேசும் மக்கள் அதிகம் வாழும் பகுதி யில் 2 லட்சத்து 60 ஆயிரம் வீடுகள் சேதம். (செஞ்சிலு வைச்சங்கம்)

உலகில் 150 மில்லி யோனன் குழந்தைகள் கட் டாய வேலைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்கள் (யூனிசெவ்)

இலங்கை ஈழத்துச்சிதம்பர திருப்பணிச் சபையினருக்கும் ஆதினத்திற்கும் இடையேயான வழக்கில் செலவு 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா கட்டப்பட்டுள் ளது! இன்னும் தொடரும். (ஊர்குருவி)

மீண்டும் ஜரோப்பிய நாடொ ன்றில் பறக்கும் தட்டு மனிதர்கள் வந்து போனதாக தகவல் பிரித்தா னிய விமானப்படை விமானங்கள் துரத்தியும் பிடிக்க முடியவில்லை.

# நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

ஆனால் நம் வாழ்க்கை யில் நோய் இல்லாத வாழ்வு இல்லை அவரவர்க்கு ஏற்ற விதத்தில் அது அமைந்திருக் கின்றது. இது உடல் சம்பந்த மான நம் பிரச்சனை ஆனால் கல்வியில் நோய் உண்டா னால் அதை நாம் முழுமை யாக குணப்படுத்த முடியும் அது போல் நம் பக்தியில் குறையிருந்தாலும் அதையும் நாம் குணப்படுத்த முடியும் இவற்றையெல்லாம் குணப் படுத்தும் குணாளிக்கு (தலைமை), அதிபர், ஆசிரியர், வைத்தியர் இபபடி பலர்) குறை உண்டானால் எப்படி நாம் அதை சீர்படுத்து வது...! வளர்ச்சியின் போதே இவற்றை இனம்கண்டு அத ற்கு ஏற்ற வகையில் தீர்வு கண்டுவிட வேண்டும் இதை ஒவ்வொருவரும் மனதில் கொண்டு செயல்பட்டால் நம் வாழ்வு ஒளிமயமான வாழ்வாக தர்மம் நிறைந்த (பூமி யாக) ஊராக மாற்ற முடியும் மிகச்சிறந்த சமூகச் சேவை

என்பதும் இதன் பொ[illegible] அமைதி நிறைந்து காணப் படும் எல்லாக்கோணங்களி லும் நின்று பார்த்து அதன் சிறப்பை பௌக்குவதை உணர்ந்தவன் சமூக சேவை என்ன எனபதை தெரிந்து கொள்வான் ஆனால் நாம் பழைய பல வீண்னா ணங்களைப் பேசி தப்பித்து விடுவதில் வீண் ணவர்களாக இருக்கும் வரை அனைத்தும் தோற்றுத்தான் போகும்.

"நமக்கு பல கோடி அனு பவங்கள் வந்தாலும் நாம் திருந்தப் போவதில்லை ஏனெனில் எம்மை சுற்றி வரட்டுக்கௌரவம் சூழ்ந்து உள்ளது."

நன்றி
ஆசிரியர்
சுவிற்சர்லாந்து

""ஓம் சிவாயநம""



ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்



கருங்காளி பெரியதம்பிரான் கோவில் விழாவும் படையலும் (20.06.2010)



ஈழத்துச்சிதம்பர ஆணி உத்தர அபிசேக உற்சவம்

# கசூரினா கடற்கரையில்...!





காரைநகர் கசூரினா கடற்கரையில (19.06.2010) யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவர்களது நீச்சல்போட்டி நடைபெற்றது. அதில் கல்லூரி அதிபரும் ஆசிரியர்களும் கலந்துகொள்வதை காணலாம்.

## ஈரவலய குறைந்து வரும் இலங்கை

இலங்கையில் உள்ள வலயம் அதிகரித்து ஈரவலயம் குறைந்து வருவதாக ஒரு ஆய்வு தெரிவித்துள்ளது. நாட்டின் பல பகுதிகளில் ஈரவலயத்துக்குள் உலர் வலயம் உட்புகுந்து வருகின்றது. என கொழும்பு பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை நடத்திய ஆய்வு தெரிவித்துள்ளது. புத்தளம், நீர்கொழும்பு, மாத்தளை, நுவரேலியா, அம்பாறை உட்பட பல இடங்களில் ஈரவலயம் குறைந்து வருகின்றது என ஆய்வு கூறுகின்றது. ஈரவலயம் குறைந்து வருவது பல வகையான தாக்கங்களை ஏற்படுத்தும் என கிழக்கு பல்க்கலை கழகத்தின் தாவரவியல் துறையின் மூத்த விரைவுரையாளர் டாக்டர் தங்கமுத்து ஜெயசிங்கம் கூறுகிறார். நாட்டின் பல்லினத்தன்மை இதனால் பெரும் பாதிப்புக்குள்ளாகும் என்று அவர் கூறுகின்றார். இலங்கைக்குரிய சிறப்பு வகையான தாவரங்களும் விலங்கினங்களும் மிகவும் அதிகமாக இந்த பகுதியிலே இருக்கின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கலாச்சார சிரழிவுகள் வவுனியாவிலும்..!

வவுனியாவில் இடம்பெறும் கலாச்சார சீரழிவுகள் எல்லைமீறி செல்கின்றன. தனியார் கல்வி நிலைத்திற்கு செல்கின்றோம் கணனி வகுப்புக்களுக்கு செல்கின்றோம் வேறு தேவைகளுக்காக செல்கின்றோம் என்று பெற்றோரிடம் கூரிவிட்டு நகர பூங்காவிற்குள் காதலர் ஜோடிகளாக வந்து உரையாடிக் கொண்டிருப்பதையும் வீதிகளில் நின்று போதை பொருள், குடு போன்றவற்றை விற்பனை செய்வதையும் அதற்கு அடிமையாகும் இளைஞர்கள் கசிப்பு காச்சிவது வீதிகளில் மது போதையில் நின்று கொண்டு பாடசாலை முடிந்து வீடு செல்லும் பெண் பிள்ளைகளை கை தொலைபேசியினால் படம் எடுத்து அசிங்கப்படுத்துவது போன்ற பல்வேறு கலாச்சார சீரழிவுகள் இடம் பெறுகின்றன. இதே போல் தென்னிலங்கையில் இருந்து சுற்றுலா பயணிகள் என்ற வலம் வரும் சிங்கள மக்கள் யாழ்-கண்டி வீதியின் இருமருங்கிலும் உள்ள மரநிழல்களில் நின்று மது அருந்தி களியாட்டம் செய்து பைலா போட்டு வீதியை அசிங்கப்படுத்துவது கலாச்சார சீரழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன.

நன்றி-மேகம்

## வியாவில் ஐயனார் ஆலய சமூக சேவை..!





காரைநகரில் வசிக்கும் இரு வறிய குடும்பங்களுக்கு வியாவில் ஐயனார் ஆலயத்தின் ஊடாக லண்டனில் வசித்துவரும் அச்சுதன் (ராணியக்கா) என்பவர் இரு பசுமாடுகளை வழங்கி இருகுடும்பங்களின் வாழ்க்கை தரத்தை மேம் படுத்தியுள்ளனர். காரை நகர் வியாவில் ஐயனார் ஆலயம் இப்படி பெயர் குறிப்பிடும்படியான பல சமூக சேவைகளை செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்விரு பசுமாடுகளையும் காரைநகர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி திரு.எஸ்.சுவாமிநாதர் அவர்கள் வழங்குவதை காணலாம்.

## யாழ் கல்லுண்டாயில் விபத்து!!







காரைநகர் திக்கரை முருகன் ஆலய விழாவிற்காக யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகரை நோக்கி ஆட்டோ ஒன்றில் பயணித்த ஒரே குடும்பத்தைச்சேர்ந்த தாய் பலி மகன், மருமகள் படுகாயம் பேரப்பிள்ளைகள் ஆபத்தான நிலையில் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். காரைநகரிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற ஆட்டோவும் நோக்குநர் மோதியதால் இவ்விபத்து இடம்பெற்றாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் களபூமியைச்சேர்ந்த பாலசுப்பிரமணியம் நாகம்மா வயது 66 என்பவரே மரணமானவர் பாலசுப்பிரமணியம் மனோகரன் வயது 36 படுகாயம் அடைந்தவர் அவரது மகள் ம.மதுரா வயது 05 படுகாயம் அடைந்தவர் காயம் அடைந்தவர் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## பாதியில் தடைப்பட்டிருக்கும் பால்குத்திமடம்



காரைநகர் வாரிவளவு பால்குத்தி படக்கேனி நீண்டகாலமாக திருத்தப்படாமல் அழிவுற்ற நிலையில் காணப்பட்டது. ஆர்வம் கொண்ட மக்கள் புனரமைப்புக்கு ஏற்பாடு செய்து அன்பர் ஒருவரின் பண உதவியுடன் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட! வேறுசிலர் இதனை தடை செய்தனர் பால்குத்தி மடம பகுதியில தடைப்பட்டுவிட்டது. இதுவே இன்றைய நிலை...!

# லண்டனிலிருந்து தனி வெள்ளி இரும்பிலான குடிநீர் கொள்கலன் அன்பளிப்பு







இலண்டன் காரை நலன்புரிச்சங்கம் காரைநகர் மக்களின் குடிநீர் பாவனைக்காக தனி வெள்ளி இரும் பிலான ஒரு லட்சத்து இரு பதாயிரம் லீற்றர் கொள்ளளவைக்கொண்ட குடிநீர் தாங்கி துவக்கவிழா ஆவணி 23ம் நாள் திங்கட்கிழமை காரைநகர் மடத்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆயல முன்றலில் வெகு சிறப்பாக நடை பெற்றது.

இவ்துவக்க விழா வைபவத்திற்கு பிரித்தானியாவில் இருந்து வருகை தந்த திரு. எஸ்.சுந்தர ராஜன் அவர்களும், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆர்.சி. ஜெயசீலன் அவர்களும், மகாராணி பட்டுசேலை உரிமையாளர் திரு.க.சோமசேகரம், தொழிலதிபர் ESP திரு.வே.நவரத்தினம் மற்றும் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

லண்டன் காரை நலன்புரிச் சங்கம் வழங்கிய இவ்கொள்கலன் 30,000£ (பவுண்ஸ்) பெறுமதியை உடையது. இவ் நிதியம் முழுமையாக வெளிக்கடனில் பெறப்பெற்று லண்டனில் கொள்வனவு செய்யப்பட்டு காரைநகருக்கு இறக்குமதி செய்யப்பட்டது என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும். மேலும் இவ்நிதியம் லண்டன் வாழ் காரைநகர் மக்களால் விரைவில் திருப்பி கையளிக்கப்படும் என லண்டன் காரை நலன் புரிச்சங்கத்தலைவர் திரு.எஸ்.நாகேந்திரம் நம்பிக்கை தெரிவித்துள்ளார். பேரிய பிரித்தானியாவில் காரைநகர் வாழ் மக்கள் 1200 குடும்பங்கள் வரை வசிக்கின்றனர். ஆனால் இலண் டன் காரை நலன்புரிச்சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கை 175 மட்டுமே.! நாம் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகர்ப்பதனூடாகவே காரைநகர் அபிவிருத்தித் திட்டங்களை விரைவு படுத்தமுடியும் எனவும் தலைவர் திரு.எஸ்.நாகேந்திரம் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் காரைநகருக்கு கொண்டு செல்லப்பட்ட குடிநீர் தாங்கி மூலம் காரை மக்கள் 100 லீற்றர் நீரை ரூ.50க்கு பெற முடியும் எனவும் கூறியுள்ளார். இதனி டையே இலண்டன் காரை நலன்புரிச் சங்கம் காரைநகர் தோப்புக்காடு பாடசாலைக்கு கதிரை மேசை தளபாடங்களை அன்பளிப்பு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.










## லண்டனிலிருந்து பெரும் நிதியம் அன்பளிப்பு

காரைநகர் களபூமி சுந்தரமூர்த்தி பாடசாலையின் புதிய அபிவிருத்தி வேலைத் திட்ட பணிகளை தாமே முன்வந்து செய்து தருவதாக லண்டனில் வசிக்கும் திரு.கந்தசாமி பாலகிருஷ்ணன் கூறியுள்ளார். இவர் புதிய வேலைத்திட்டத்தை தனது தகப்பனார் கந்தசாமியின் ஞாபகார்த்தமாக அமையும் என குறிப்பிட்டுள்ளார். மேலும் லண்டன் காரை நலன் புரிச்சங்கத்தினூடாகவே மேற்படி பணிகள் நிறைவு பெறும்.



பாலாவோடை ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோவில் உற்சவம்



காரைநகர் சிவகாமி அம்மன் மகோற்சவ விழா

# காரைநகர் வேதரடைப்பு கிராம முன்பள்ளி விளையாட்டு போட்டிகள்

**காலம்: 02.08.2010**

















# காரைநகருக்கு புதிய தலைவர்



கடந்த வைகாசி மாதம் 30 ஆம் நாள் காரைநகருக்கு புதிய தலைவராக வியாவில் ஜயானாக் கோவில் பரிபாலகரும் மகாராணி பட்டுச் சோலை உரிமையாளருமான திரு.க.சோம கேரம் அவர்கள் மேலும் செயலாளராக காரை நகர் வேதரடைப்பைச்சேர்ந்த வர்த்தகர் உரிமை யாளர் திரு. இ.ஜெயராசா அவர்களும் பொரு லாளராக களபூமியைச்சேர்ந்த திரு.கு.சிவஞான சுந்தரம் (இலங்கை வங்கி முகாமையாளர்-ஊர்காவற்றுரை) அவர்களும் உபதலைவராக கோட்டக்கல்வி அதிகாரி திரு.ப.விக்கினேஸ்வரன் அவர்களும் உபசெயலாளராக திரு.ப.ஐங்கரன் அவர்களும் தொடர்ந்து நிர்வாக சபை உறுப்பினர் களாக திரு.இ.திருப்புகழூர்சிங்கம், பண்டிதர் மு.சு.வேலாயுதம்பிள்ளை, திரு.வே.நடராசா, திரு.தில்லையம்பலம், திரு.E.S.P. நாகரட்ணம், திரு.சு.சோதிநாதன் (உதவி பிரதேச செயலாளர்-நல்லூர்), திரு. ப.சற்குணராசா (சீமாட்டி ரெக்ஸ்), திரு.S.ஜெயராம் தோப்புக்காடு, திரு.S.கிருஸ்ன பவன் (ஆசிரியர்-காரைமத்தி), திருமதி புஸ்பராசா சார்திரகுமார் (மெய்கண்டான் வித்தியாசாலை அதிபர்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.









புதிய சபையின் வேலைத்திட்டத்தில் கடல் நீரை நன்னீராக்கும் திட்டம், வேளன் அனை புனரமைப்புத்திட்டம் பொதுச்சந்தை அமைத்தல் பாரம்பரிய சிறு கைத்தொழில் மேம்பாட்டு திட்டம் காரைநகரின் முகப்பு பகுதியில் சவுக்மர நாட்டல் திட்டம் இதுபோன்ற பல அபிவிருத்தித்திட்டங்களை மேற்படி சபையினர் செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றமையும் இவைஅணைத்தும் காரைநகர் பிரதேசசபையின் அபிவிருத்தித்திட்ட (NELC)த்தின் கீழ் முன்மொழியப்பெற்ற ஐந்து திட்டங்கள் ஆகும்.













## காரை பாடசாலைகளுக்கு புதிய அதிபர்கள்





கடந்த 16.06.2010 தொடக்கம் காரைகரிலுள்ள யா/கலாநிதி ஆ.தியாக ராசா ம.மா.வி.த்திற்கும் யாழ்ற்றன் கல்லூரி, கனிஷ்ட பாடசாலை வலந் தலை வடக்கு அமெரிக்க மிசன் தமிழ் கலவன் ஆகியவற்றிற்கு புதிய அதிபர்கள் முறையே பொறுபேற்றுள்ளனர். திரு.பொ.சிவானந்த ராசா (யா/கலாநிதி ஆ.தி.ம.மா. வித்தியாலயம்) திரு.தி.சோம சேகரம் (யாழ்ற்றன் கல்லூரி) திருமதி கௌ. அருள்மொழி (வலந்தலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை)

## காரைநகர் களபூமி சுந்தரமூர்த்தி பாடசாலைக்கு புதிய வேலைத்திட்டம் லண்டன் அறிவிப்பு!!







லண்டன் நலன்புரிச் சங்கம் காரைநகர் களபூமி சுந்தரமூர்த்தி பாடசாலைக்கு புதிய அபிவிருத்தி வேலைகளை அறிவித்துள்தாக பாடசாலையின் பழைய கட்டிட பகுதி அப்புறப்படுத்தப்பட்டு அந்த இடத்தில் விளையாட்டு மைதானம் ஒன்றும் இருக்கைகளுக்கான கட்டிடமும் துவிசக்கர வண்டிகள் நிறுத்துவதற்கான நிழல்கட்டிடமும் பஸ்தரிப்பு நிலையமும் அப்பகுயில் அமைக்கப்பட உள்ளதாக லண்டன் நலன்புரிச்சங்க தலைவர் திரு.எஸ். நாகேந்தரம் அவர்கள் அறிவித்துள்ளார். மேலும் களபூமியின் ஆரம்பப்பிரிவுப்பாடசாலை கட்டிடம் "ப" "ப.அ" அமைப்பில் விரிவுப்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# யாழ் காரை இந்துக்கல்லூரின் ஸ்தாபகர் தினம்







கடந்த ஆவணி 6ஆம் நாள் வெள்ளிக்கிழமை யாழ். காரை நகர் இந்துக்கல்லூரியின் ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் மிகச்சிறப்பான முறையில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக லண்டனைச்சேர்ந்த முன்னாள் நலன்புரிச்சங்கத்தலைவர் திரு.இ.சுந்தரதாசன் அவர்களும் கால்நடை வைத்தியர் Dr.ஆ.சிவசோதி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர். 500க்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்ட விழாவிற்கு கல்லூரி அதிபர் திரு.பொ. சிவானந்தராஜா அவர்கள் தலைமை வகித்தார். இவரின் நேரடி முயற்சியின் கீழ் கல்லூரி நடராஜா மண்டபம் புதுப்பொழிவு பெற்று விழா சிறப்பாக நடைபெற்றது. கனடா கலாச்சார மன்றம் இலங்கை ரூபா 50,000 கொடுத்து உதவியுள்ளமை கல்லூரி அதிபர் பாராட்டியுள்ளார்.









# கனடா காரை கலாச்சார மன்றத்தின் நிறைவேற்றப்பட்ட பணிகள்

## 2009 ஆவணி 9 - ஆனி 26 2010

## இந்தப்பணிகள் அனைத்தும் காரை அபிவிருத்திச்சபை மூலமாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

● 2009 ஆண்டுக்கான வைத்தியக் கலாநிதி டாக்டர் விஜயரட்ணம் விசுவலிங்கம் ஞாபகார்த்தமாக தரம் 6முதல் க.பொ.த வரை கல்வி பயிலும் வசதி குறைந்த திறமையான மாணவர்களுக்கான புலமைப் பரிசில் காரைநகரில் உள்ள 4 பாடசாலைகளில் உள்ள 40 மாணவர்களுக்கு மாதா மாதம் ரூ.500.00 வீதம் 12 மாதங்களுக்கு வழங்கப்பட்டது.

● கடந்த வருட வன்செயல்களினால் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து காரை நகரிற்கு வந்திருந்த பாடசாலை சிறார்கள் சுமார் 500பேர் வரையில் காரைநகரில் உள்ள அனைத்துப்பாடசாலைகளிலும் சேர்க்கப்பட்டிருந்தார்கள். இதில் 264 மாணவர்களும் 236 மாணவிகளும் அடங்குவர் காரைநகர் இந்துக்கல்லூரி 175, யாழ்ற்றன் கல்லூரி 89, சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாசாலை 51, பாலாவோடை அ.மி.த.க. பாடசாலை 59, ஊரி 61 காரை மெய்கண்டான 13, வலந்தலை அ.மி.த.க பாடசாலை 40, வியாவில் அ.மி.த.க பாடசாலை 12 இந்த இடம்பெயர்ந்து காரை நகருக்கு வந்த பாடசாலை இடம்பெயர்ந்து காரைநகருக்கு வந்த பாடசாலை சிறார்களுக்கு 150,000.00 ரூபா பெருமதியான சீருடைகள் 2009 ஒக்டோபர் 30ஆம் திகதி காரை அபிவிருத்திசபையூடாக வழங்கப்பட்டது.

● காரைநகரைச்சேர்ந்த கிழக்குப்பல் கலைக்கழக மாணவன் வைத்திலிங்கம் ஜெகதீஸ்வரனின் மேற்படிப்பு உதவிக்காக மாதாந்தம் 5000.00ரூபா 4 வருடங்களுக்கு (240,000.00ரூபா) 2010 ஜனவரியில் திரு. சிவகுமார் கனகசுந்தரம் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

● குழந்தை நகுல்ராஜ் நக்கீரன் வயது 18மாதங்கள் இவர் கடந்த போரில் தனது பெற்றோரை இழந்துவிட்டார். இப்படியான தற்சமயம் இவர் தனது சித்தியின் பராமரிப்பில் உள்ளார். ஆனால் அந்த சித்தியின் கணவரும் கடந்த போரில் இறந்துவிட்டார். இப்படியான சூழ்நிலையில் சித்தியும் இந்த குழந்தையும் எந்தவித வருமானமும் இல்லாமல் உள்ளார்கள். எனவே இக் குழந்தையின் பராமரிப்புச்செலவிற்கு எமது கனடா-காரை கலாச்சார மன்றத்தை அணுகியுள்ளார்கள். கடந்த வன்செயலில் தனது பெற்றோரை இழந்த 18மாதக்குழந்தை நக்கீரனுக்கு 18வயது வரைக்குமான ஓர் நீண்ட கால பராமரிப்பு உதவியை கனடா வாழ் காரை அன்பர் ஒருவர் மனமுன் வந்து வழங்க முன்வந்துள்ளார். இவருக்கு மாதம் ரூ.2000.00 வீதம் நீண்டகால உதவித்திட்டமாக அவருடைய 18வயது வரக்கும் இந்தப்பணம் வழங்கப்படும். (18 வயது வரைக்குமான மொத்த பராமரிப்புச் செலவு 4இலட்சத்து 32ஆயிரம் ரூபா)

● அத்தோடு இதே குழந்தை நகுல்ரஜ் நக்கீரனுக்கு திரு.செல்வராஜா தம்பையா 10,000.00 ரூபாவும் திரு.ஜெயச்சந்திரன் தம்பிராஜா 5,000.00 ரூபாவும் வழங்கியுள்ளனர்.

● சிறுவன் நகுல்ராஜ் நக்கீரனுக்கு வழங்கிய அதே அன்பர் அடுத்த வருடம் பல்கலைக்கழகம் செல்லவிருக்கும் மருத்துவ பீட மாணவன் பிறேம்குமார் பிரசாத்திற்காக மாதம் 5000.00ரூபா 4 வருடங்களுக்கு (240,000.00) வழங்கும் உதவித் திட்டத்திற்கும் தனது உதவியை வழங்க முன்வந்துள்ளார். இந்த மாபெரும் உதவியை அளித்த அந்த அன்பருக்கு கனடா-காரை கலாச்சார மன்றம் தனது மனமுன்வந்த நன்றியைத்தெரிவித்துக் கொள்கின்றது.

● காரைநகரைச்சேர்ந்த கலாநிதி ஆ.தியாகராஜா மத்தய மகாவித்தியாலத்தில் சென்ற வருடம் 5ஆம் வகுப்பில் புலமைப்பரிசில் பெற்ற மாணவன் ஜனகாந்தன் ஏகாம்பரம் இவர் தனது மேற்படிப்பை யாழ் இந்துக்கல்லூரில் கற்று வருகின்றார். இவரது மேற்படிப்பு (A/L) முடியும் வரைக்கான உதவியாக மாதாந்தம் 3000.00ரூபா (6வருடங்கள் ரூ.216,000.00) கனடா காரை அன்பர் ஒருவரினால் வழங்கப்பட்டுள்ளது.

● காரைநகரைச்சேர்ந்த செல்வி சிவதர்சினி இரத்தினம் என்பவர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைப்பிரிவான இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் இசைத்துறையில் கல்வி பயின்று வருகின்றார். இவரது குடும்பநிலைமை காரணமாக இவருக்கு மாதாந்தம் 5000.00ரூபா 4 வருடங்களுக்கு (240.000.00ரூபா) ஜெயந்தி துரைசாமி என்பவரால் ஜூன் மாதம் தொடக்கம் வழங்கி வருகிறது.

● 19.02.2010இல் ஊர் பாடசாலைக்கு மின் இணைப்பு வசதி ஏற்படுத்திக்கொடுப்பதற்கு ஒரு இலட்சம் ரூபா காரை அபிவிருத்திச் சப மூலமாக வழங்கப்பட்டது.

● இதே பாடசாலையில் கல்வி பயிலும் தாய், தந்தையரை இழந்த மற்றும் வசதி குறைந்த மாணவர்களுக்கான உதவித்தொகை பாடசாலை அதிபரின் பெயர்ப்பட்டியல் எமது மன்றத்திற்கு கிடைத்த பிற்பாடு உடனடியாக அனுப்பிவைக்கப்படும்.

● 2010ஆம் ஆண்டுக்கான வைத்தியக் கலாநிதி டாக்டர்.விஜயரட்ணம் விசுவலிங் கம் அவர்களின் தாயார் அமரர் திருமதி ஞானசுந்தரம் விசுவலிங்கம் ஞாபகார்த்த புலமைப் பரிசில் காரைநகரில் உள்ள 4 பாடசாலைகளில் திறமையான வசதிகுறைந்த 40 மாணவர்களுக்கு மாதா மாதம் ரூ.500.00 வீதம் 12 மாதங்களுக்கு வழங்கப்பட்டது.

# இலங்கை மத்திய மாகாணத்தின் 3 இடங்கள் உலக மரபுரிமையாக ஏற்பு

மத்திய மாகாணத்தைச்சேர்ந்த மூன்று இடங்களை உலக மரபுரிமை இடங்களாக யுனெஸ்கோ நிறுவனம் ஏற்றுக்கொண்டுள்ளது.

சுற்றாடல் துறை பிரதி அமைச்சர் பைஸர் முஸ்தபா தலைமையிலான குழு இன்று பிரஸல்ஸ் நகரில் நடைபெறுகின்ற உலக மரபுரிமைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் பிரேரணையொன்றை சமர்ப்பித்து அதன் அடிப்படையில் உலக அதிசயங்கள் மற்றும் உலக மரபுரிமை தளங்கள் என்பவற்றைத்தீர்மானிக்கும் குழு அதனை ஏற்றுக்கொண்டது.

அதன்படி மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் உள்ள நக்கிள்ஸ்




மலைத்தொடர், நுவரெலியா மாவட்டத்தில் உள்ள ஹோட்டன் சமவெளி மற்றும் சிவனொளிபாத மலை (ஸ்ரீபாத) என்பனவே உலக மரபுரிமை இடங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

கண்டி நகரும் உலக மரபுரிமை நகராகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கையெழுத்து கைது

கையெழுத்தை வைத்து ஆளைக் கண்டுபிடித்து விடலாம் அதுதான் புசமிாடமுடால என்ற எழுத்து சாஸ்திரம் அமெரிக்காவில் ஒரு கொலைகாரனையே அவன் எழுதிய கையெழுத்தை வைத்துக் கண்டுபிடித்து விட்டார்களாம்.

ஆமாம் அவன் முதலில் ஒருத்தருக்கு மிரட்டல் கடிதம் எழுதியிருக்கிறான் அதன் பின் அவரைக்கொலை செய்து விட்டான் ஆள் யாரென்றே தெரியவில்லை. கடிதம் மட்டும் கிடைத்தது. கையெழுத்து நிபுணர்கள் அதைப்பார்த்து விட்டு ஆள் இப்படித்தான் இருப்பான் என்று சில அடையாளங்களைச்சொன்னார்கள் அதாவது அவன் தியானம் பண்ணுபவனாக இருப்பான் கண்ணாடி போட்டிருப்பான் அமைதியாக இருப்பான். இப்படிச்சில அடையாளங்கள் இதையெல்லாம் ஆதாரமாக வைத்தே கடைசியில் அந்த ஆளை ஒரு மடத்தில் வைத்து பிடித்து விட்டார்களாம்.

# இலங்கையர்கள் 1, 141 பேர் ஆஸியில் அரசியல் தஞ்சம்

இலங்கையிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு 2008 ஒக்டோபரிலிருந்து இது வரை ஆயிரத்து 141 பேர் அரசியல் தஞ்சம் கோரி வந்துள்ளனர் என ஆஸிக்கான இலங்கைத் தூதுவர் சேனக பல்கம்வாய தெரிவித்தார். அவர்களில் 843 பேர் படகுகளின் ஊடாகவே ஆஸியை வந்தடைந்தனர் என்றும் ஆஸ்திரேலியாவின் தடுப்பு முகாம்களில் 740 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் சொன்னார். தடுப்பு முகாம்களில் உள்ள 300 பேருக்கு ஆஸ்திரேலியாவுக்கான குடியுரிமை பெற்றுக்கொடுக்கப்படும். அத்துடன் குறித்த 300 பேரின் குடியுரிமைக்கான விண்ணப்பங்கள் ஆஸியில் குடியுரிமையைப் பெற்றுக்கொள்ளத் தகுதியானவையா என்பது குறித்து பரிசீலனை செய்யப்படுகின்றன என்றும் அவர் சொன்னார். தமிழர்களே ஆஸியில் அதிகமாக புகலிடம் கோரியுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

# சுவிட்சர்லாந்து அணி பலம்பொருந்திய ஸ்பெய்ன் அணியை அதிர்ச்சி தோல்வியடைச்செய்தது.




சுவிட்சர்லாந்து அணி பலம் பொருந்திய ஸ்பெய்ன் அணியை அதிர்ச்சி தோல்வியடைச்செய்து உலகக்கிண்ணப்போட்டித்தொடரின் முதல் போட்டியில் வெற்றியை பதிவு செய்து கொண்டுள்ளது. சுவிட்சர்லாந்து அணி 1-0 என்ற கோல்கணக்கில் ஸ்பெய்ன் அணியை வீழ்த்தியுள்ளது. 1954 ஆம் ஆண்டுக்குப்பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சுவிட்சர்லாந்து அணி உலகக் கிண்ண முதல் போட்டியில் வெற்றியீட்டிய தில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஐரோப்பிய கிண்ண சாம்பியன்களான பலம் பொருந்திய ஸ்பெய்ன் அணி எதிர்பாராத விதமாக சுவிட்சர்லாந்திடம் தோல்வியடைந்துள்ளது. ஆனால் உலகக்கிண்ணத்தை தட்டிச் சென்றதை குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கியால் சுட்டு மரண தண்டனை

அமெரிக்காவின் யூடா மாகாணத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த கொலைக்குற்றவாளி ஒருவருக்கு துப்பாக்கியால் சுட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. அமெரிக்காவில் பல மாகாணங்கள் விஷ ஊசி போட்டு மரண தண்டனை நிறைவேற்றுவது வழக்கம். கார்டனருக்கு செய்யப்பட்ட வகையில் துப்பாக்கியால் சுட்டு தண்டனை நிறை வேற்றுவதென்பது 'வைலட் வெஸ்ட் ஜஸ்டிஸ்' என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுகின்ற கவ்பாய் படங்களில் வருகிற மாதிரியான தண்டனை என்று விமர்சகர்கள் வருணித்துள்ளன.

# காந்தியின் வெண்கலச்சிலை கனடாவில் திறப்பு

வெண்கலத்தாலான மகாத்மா காந்தி சிலை கனடா நாட்டின் வின்னிபெக் கிலுள்ள மனித உரிமைக்கான அருங்காட்சியகத்தில் திறந்து வைக்கப்பட்டது. இச்சிலையை கனடாவுக்கான இந்திய தூதர் சசிசேகர் கவாய் திறந்து வைத்தார். 'காந்தியின் அகிம்சை நெறிகள் நீதி போதனைகள் உரை உலகத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் பொருந்தும். மனித உரிமைக்கான காந்தியின் சிந்தனை நம்பிக்கை ஈடு இணையற்றவை' என்று கூறினார். 2004ஆம் ஆண்டில் இச்சிலையை இந்திய அரசாங்கம் கனடா அருங்காட்சியகத்து அன்பளிப்பாக தந்தது. இச்சிலையைப் புகழ்பெற்ற சிலை வடிவமைப்பாளர் ராம் வாஞ்சி சுடேர் வடிவமைத்துள்ளார். இந்நிகழ்ச்சியில் கனடா வாழ் இந்திய மக்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

# ஆப்பிரிக்கர்கள் கட்டிய இந்து ஆலயம்



மேற்கு ஆப்பிரிக்க நாடான கானாவின் தலைநகர் அக்ராவில் இருக்கும் இந்து மத ஆலயம் உள்ளூர் மக்களை கவர் ந்து வருகிறது. ஆலயத்திலுள்ள ஒரு மேடையில் இந்துமதக்கடவுள்களின் திருவுருவச்சிலைகளுக்கு வண்ணமய மான உடைகள் உடுத்தப்பட்டுள்ளன. இந்துமதக் கடவுளின் திருவுருவங்களுடன் ஏசுநாதரின் ஒரு படமும் வைக் கப்பட்டுள்ளது. கானாவின் தலைநகரில் இருக்கும் இந்த இந்து மத ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் அனைவரும் பூர்வகுடி ஆப்பிரிக்கர்கள். இந்த ஆலை யத்துக்கு வரும் பக்தர்களுக்கு இந்தியாவுடன் எந்தத் தொடர்பும் இல்லை. அவர்கள் இந்தியாவுக்கு விஜயம் செய்ததும் கிடையாது. ஆனாலும் இந்துமதச்சட்டங்களையும் சடங்குகளையும் பாரம்பரிய இந்துமுறைப்படி அவர்கள் கடைபிடிக்கிறார்கள். அவர்கள் அனைவரும் தாங்கள் இந்து மதத்துக்கு மாறியுள்ளதாகக்க கூறுகிறார்கள். எனினும் அவர்கள் இன்னமும் தங்களது கிறித்துவப் பெயர் களையோ அல்லது தமது பாரம்பரிய ஆப்பிரிக்க குடும்பப் பெயர்களையோ இன்னமும் பயன்படுத்தி வருகிறார்கள். ஆனால் அவர்கள் தங்களது பிள்ளைகளுக்கு ராமா அல்லது கிருஷ்ணா என்று பெயர் வைக்கின்றார்கள. ஒவ்வொரு நாள் மாலையும் இங்கு பக்தர்கள் மாலை நேரப்பிரார்த்தனைக்காக கூடுகிறார்கள். அதற்கு பிறகு இறைவனுக்கு படைக்கப்பட்ட பிரசாதங்கள் பக்தர்களுக்கு வழங்கப்படுகின்றன.



# ஆப்பிரிக்க இந்துமத குரு கானானந்த சரஸ்வதி

1975ஆம் ஆண்டு கானாவின் முதல் இந்து மடாலயத்தை ஏற்படுத்தி அதை நடத்தி வருபவர் சுவாமி கானானந்த சரஸ்வதி.

மாலைநேரப் பிரார்த்தனைகளின் போது ஒலிபெருக்கி மூலம் இந்து மதத்தின் சிறப்புகளையும் தத்துவங்களையும் வந்துள்ளவர்களுக்கு விளக்குகிறார். கானாவின் பூர்வகுடி மதத்தில் பிறந்த தனது பெற்றோர்கள் கிறிஸ்தவ மதத்துக்கு மாறினார்கள் எனக்கூறுகிறார் கானானந்த சரஸ்வதி இந்து மதம் குறித்த சில புத்தங்களை தான் பயணித்ததாகவும் அதன் பின்னர் ரிஷிகேஷக்குதான் பயணித்ததாகவும் அவர் கூறுகிறார். அங்கே தான் சந்தித்த ஆன்மீக குரு அக்ராவில் ஒரு இந்து மடாலயத்தை திறக்குமாறு அறிவுறுத்தியதாகவும் சுவாமி கானானந்த சரஸ்வதி பிபிசியிடம் தெரிவித்தார். 'அவரது இயற்பெயர் கைட்' உண்மையை தேடுபவர்கள் இந்த இந்து மடாலயம் குறித்து விசாரிக்கிறார்கள் எனவும் அவர் தெரிவிக்கிறார். இந்ந ஆலயத்துக்கு இரண்டாயிரத்துக்கும் அதிகமாக கானாவில் இருக்கும் பூர்வ குடி ஆப்பிரிக்க இந்துக்கள் தொடர்ந்து வந்து செல்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மிதக்கும் பன்னாட்டு ஆய்வகம்

ஜப்பானின் யேமெயை கடற்பகுதிதான் உலகிலேயே அதிக மான நிலநடுக்கங்களை சந்தித்து வரும் இடம் இந்தப்பகுதியில் ஏற்படும் நில நடுக்கங்களின் வலிமை ரிக்டர் அளவு கோளில் 8.3 ஆகும்.

இந்த இடம் ஜப்பானின் தென் மேற்கே உள்ளது. ஒரு பன்னாட்டு அறிஞர் குழு இந்த கடற் பகுதியில் தங்கி ஆய்வுகளை மேற் கொள்கிறது. இதற்கென ஊாமைலர என்று பெயரிடப்பட்டு ஜப்பானிய கப்பல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய மொழி யில் ஊாமைலர என்றால் பூமிப்பந்து என்று பொருளாம்.

இந்தக்கப்பலில் தங்கி ஆய்வுப்பணிகளை மேற்கொள்ளும் குழுவில் ஐரோப்பா, சீனா, தென் கொரியா, அமெரிக்கா ஆகிய நாடு களைச்சேர்ந்த ஆய்வாளர்கள் இருக் கிறார்கள் நிலநடுக்கம் ஏற்படுவதை முன் கூட்டியே கண்டு பிடிப்பது தான் இந்த ஆய்வுகளின் நோக்கம் என்று இந்தக்குழுவைச்சேர்ந்த டாக்டர் ஹெரா ல்டடோபின் கூறுகிறார். இவர் விஸ்கான்சி மாடிஸன் பல்கலைக் கழகத்தின் மண்ணியல் நிபுனர் நில நடுக்கம் ஏற்படு வதற்கான முன்னறி விப்புகள் இப் போதும் கிடைக்கின்றன.

ஆனால் அவை சில வினாடி களுக்கு முன்பு மட்டுமே கிடைக்கின்றன.

இந்த ஆய்வுகளின் அன்றாட முன்னேற்றத்தை NanTroSEIZEஇன் இணையதளத்தில் இருந்து தெரிந்து கொள்ளலாம். Nan TroSEIZE என்பது Nankai Trough Seismogenic Zone Experiment என்பதன் சுருக்கப்பெயராகும்.



# குழந்தைகள் கடத்தப்படுகின்றன




தமிழ் நாட்டில் மாநிலம் தழுவிய அளவில் குழந்தைகள் கடத்தல் இப்போது நடந்து வருவதாக செய்திகள் வந்திருக்கின்றன. அரசு மற்றும் தனி யார் மருத்துவமனைகளிலிருந்து குழந்தைகள் பிறந்தவுடனேயே மருத்துவமணை ஊழியர்களின் உதவியுடன் குழந்தைகள் கடத்தப்பட்டு விற்கப்படுவதாக செய்திகள் வெளியாகியி ருக்கின்றன. கடத்திலில் ஈடுபட்டதாக புதுச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் சிலர் கைதாகியிருக்கின்றனர். மதமாற்றத்தில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு இதில் தொட ர்பு இருக்கின்றதா என பொலிசார் விசாரித்து வருவதாகவும் கூறப்டுகிறது. அகில இந்திய குழந்தைகள் நலக்குழுவின் தமி ழக பிரிவின் தலைவர் டாக்டர் மனோராமா கூறுகையில் பல காரணங்களுக்காக குழந்தைகள் கடத்தப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். பதமாற்றம் செய்தல் அநாதைகள் இல்லம் நாடத்துவதாகக்கூறி வெளி நாடுகளிலிருந்து பணம் பெறுதல் வெளி நாட்டாருக்கு குழந்தைகளை விற்றல் போன்ற காரணங்களுக்காக கடத்தல் இடம்பெறுவதாக குறிப்பிட்டுள்ளார். கடந்த ஒரு மாதத்தில் மாத்திரம் இவ்வாறு கடத்தப்பட்ட 15 குழந்தைகள் மீட்கப் பட்டிருப்பதாகவும் அதில் கிறிஸ்தவ போதகர்கள் இருவரும் அடங்குவதாக தமிழக பொலிசார் கூறியுள்ளனர்.




# உலக வங்கி மதிப்பிட்டுள்ள இந்தியா...!

உலகில் வறிய நிலையில் வாழும் மக்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கினர் இந்தியாவில் இருப்பதாக உலக வங்கி மதிப்பிட்டுள்ளது. ஆபிரிக்காவில் உள்ள 26 மிக வறிய நாடுகளில் வசிக்கும் வறியவர்களின் எண்ணிக்கையை விட எட்டுவிட இந்திய மாநிலங்களில் இருக்கும் வறியவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதாக புதிய ஆய்வு கூறியுள்ளது. 42 கோடியே பத்து லட்சம் பேர் வறிய நிலையில் இருப்பதாக ஐ.நாவின் ஆதரவுடன் ஆக்ஸ்போர்ட் பல்கலைகழகத்தின் வறுமை மற்றும் மனிதவள மேம்பாட்டு முயற்சியின் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வருமானத்தை மட் டுல்லாது கல்வி, சுகாதார வசிதிகள் எந்தளவு கிடைக்கின்றன என்பது போன்ற விடையங்களை வைத்தே இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றன. இவர்களின் புதிய அட்டவனைப் படி உலகில் மொத்தம் 17ஆம் கோடி பேர் வறியவர்கள் என்று கணிக்கப்பட் டுள்ளனர். இதில் பாதிப்போர் தெற்கா சியாவில்தான் வாழ்கின்றனர். ஆப்பிரிக்காவில் கால்வாசி பேர் வாழ்கின்றனர் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

# தேன்மொழி தமிழ் இனிதே தொடங்கி அமைதியுடன் நிறைவு கண்ட மாநாடு..!









தமிழக அரசின் ஏற்பாட்டில் கடந்த ஆனி 23ஆம் நாள் புதன் கிழமை இந்திய குடியரசுக்குத் தலைவர் பிரதிபா தேவிசிங் பாட்டீல் தலைமையில் செம்மொழி மாநாடு தொடங்கியது. ஒரு மாபெரும் கலாச்சாரத்துக்கு தமிழ் மொழி அடித்தளமாக இருந்துள்ள காரணத்தினால் அதற்கு செம்மொழி தகுதி கிடைத்துள்ளது. என்று இந்திய குடியரசுத்தலைவர் தமது தொடக்க உரையில் தெரிவித்துள்ளார். இந்த மாநாட்டில் முதல் முறையாக அறி முகப்படுத்தப் பட்டுள்ள கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித்தமிழ் விருதினை ஃபின்லாந்து நாட்டைச்சேர்ந்த மொழியறிஞர் பேராசிரியர் சுஸ்கோ பர்போலோ ஏற்புரை நிகழ்த் தினார்.

உலகின் பல பகுதிகளிலிருந்து தமிழறிஞர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். உலகின் பல நாடுகளில் வாழும் தமிழர்களின் குழந்தைகள் தமிழ் கற்க எளிமையான புத்தகங்களை தமிழக அரசு வெளியிட வேண்டும் என்கிற வேண்டு கோளை தமது வாழ்த்துரையின் போது பேராசிரியர் சித்தம்பி வெளியிட்டார். மேலும் இவ் செம்மொழி மாநாட்டை யொட்டி சிறப்பு பேரணிகளும் இடம் பெற்றன. 23ஆம் தொடங்கிய மாநாடு 27ஆம் திகதி மாலை நிறைவு கடந்தது. நிறைவு விழா நிகழ்ச்சியில் இந்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தலைமை வகித்தார். இந்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் உட்பட மத்திய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் பலரும் பங்கேற்று சிறப் பித்தார்கள். தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி அவர்கள் பேசுகையில் தமிழில் படித்தவர்களுக்கு அரசு பணியில் முன்னிரிமை அளித்திட உரிய சட்டம் இயற்றப்படும் என அறிவித்துள்ளதோடு தமிழை மத்தியில் ஆட்சி மொழியாக்க மத்திய அரசுக்கு கோரிக்கை விடுக்கப்படும் என்பதையும் இனி பாடத்திட் டத்திலும் செம்மொழி இடம்பெறும் என அவர் தெரிவித்துள்ளார். பிறப்பு அஞ்சல் கலை வெளியீடும் இடம் பெற்று செம்மொழி மாநாடு நிறைவு கண்டது.









# ஐ.நா அறிவிப்பு

சுத்தமான குடிநீர் மனிதனின் அடிப்படை உரிமை என ஐ.நா. அறிவித்துள்ளது. உலகெங்கும் ஆண்டு தோறும் ஐந்து வயதுக்குட்பட்ட 15 லட்சம் சிறார்கள் குடிநீர் மற்றும் சுகாதாரமின்னை தொடர்பான நோய்களில் இறக்க தேரிடுகிறது என கூறியுள்ள நிலையில் ஐ.நாவின் இந்த தீர்மாணத்துக்கு ஆதரவாக 122 நாடுகள் வாக்களித்துள்ளன. கனடா, பிரிட்டன், ஆஸ்திரேலியா உட்பட 41 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. உலகில் 88



கோடிக்கும் அதிக மான மக்களுக்கு பாதுகாப்பான குடிநீருக்கு வழியில்லை என்றும் 260 கோடிக்கும் கூடுதலான மக்களுக்கு அடிப்படை சுகாதார வசதிகள் கிடைப்பதில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

உலகிலுள்ள அனைவரும் பாதுப்பான குடிநீரை பெற்றுக்கொள்ள சர்வதேச சமூகம் தனது முன்னெடுப்புக்களை அதிகரிக்க வேண்டும் என அந்த தீர்மானம் வலியுருத்துகிறது.

# தலையிடி வருபவர்களுக்கு!! யோகா சிறந்த பயிற்சி



உலகில் பல மக்களுக்கு தலையிடி மிகப்பெரிய தலையிடியாகவுள்ளது. இதற்கு மருந்து மாத்திரைகள் எடுப்பதைக் காட்டிலும் யோகா பயிற்சி சிறந்த வழி முறையாகும் என ஆய்வின் மூலம் தெரிவந்துள்ளது. பொதுவாக தலையிடி கால நிலை மாற்றம் அதிக வேலைப் பலு குறைந்த தூக்கம், போன்ற பல காரணங்களால் தலையிடி வருவதாக மருத்துவர்கள் கூறியுள்ளனர் அது பரம் பரை



வியாதி இல்லை என்பது உறுதி. உலகில் பல இடங்களில் யோகா பயிற்சி பரவலாக பரவி வந்தாலும் அதன் சிறப்பு பலரும் புரிந்து கொண்டுவிட்டார்கள். உடலை ஆரோக்கியமாகவும், புத்துணர்ச்சியாகவும் வைத்துக் கொள்வதில் யோகாசனத்திற்கு ஈடு இனையே கிடையாது. அப்படிப் பட்ட யோகாசனம் செய்வதால் சகல நோய்களும் மாற்றம் கண்டு சிறந்த பலனை பெற முடியும் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். தலையிடி உள்ளவர்கள் யோகா பயிற்சியுடன் கூடவே கை விரல்கள் கொண்ட பயிற்சி முறையும் அவசியம் என கூறும் பயிற்சியாளர்கள், நீர் அருந்துதலும் அவசியம் என கூறியுள்ளனர்.

# அபிவிருத்தியை நோக்கி காரைநகர்

இதுவரையும் ஸ்தபிதம் அடைந்திருந்த காரைநகர் அபிவிருத்தி வேலைகள் மீண்டும் புத்துயிர் பெற தொடங்கிவிட்டான். பல புதிய அபிவிருத்திக்காக அரசாங்கத்தினால் நிதி ஒதுக்கப்பட்டு அவை செயல்பட ஆரம்பித்து விட்டன. அதன் அடிப்படையில் காரைநகருக்கான பிரமாண்டமான பொதுச்சந்தை என்று உருவாக்கப்பட இருக்கின்றது. ஈழத்துச்சிதம்பரத்துக்கான புதுவீதி அகலிக்கப்பட இருக்கின்றது.

மேலும் பிரதேச சபையூடாக சுப்பிரமணியம் வீதி செப்பனிடப்படுகின்றது. மருதபுரம் கிராமத்திற்கு மின்சார வசிதிக்காக வீதி எழுக்கப்பட்டுள்ளது. வேதரடைப்பு கிராமத்திற்கு புதிய சனசமூக நிலையம் அமைக்க 6 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதே போல் பிரதேச சபை நூலகவிருந்திருக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தில்லை மயான சுற்று மதில் கட்டவும் நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கோவளம் கலங்கரை விளக்கமும் செப்பிடபநிடப்படுகிறது. இவ் அபிவிருத்தி பாணிகள் காரைநகர் பிரதேசி சபையூடாக செயல்பட ஆவண செய்யப்பட்டுள்ளது.

-தலைநகர் கொழும்பிலிருந்து

நேரு சொன்னார்: சோம்பேறித்தனமே உங்கள் மிகப்பெரிய எதிரி...
காந்தி சொன்னார்: உங்கள் எதிரிகளை நேசியுங்கள்...
இப்ப சொல்லுங்க... மாமா சொல்றத கேக்குறா???
இல்ல தாத்தா சொல்றத கேக்குறதா???
ஆக்கம்: ரவி செல்லத்துரை

# அதி வேகமாக செயல்படும் லண்டன் வாழ் காரை மக்கள்

காரைநகரை மேலும் அபிவிருத்தி செய்ய லண்டன் வாழ் பாலவோடை பழை மாணவர்கள் தமது ஆரம்ப பாடசாலை மேலும் புதுப்பிக்கும் நோக்கில் பழையமானவர்கள் என்று சேர்ந்து நிதிசேகரிப்பில் ஈடுபட்டு செயல்படுகிறார்கள். இதேபோல் காரைநகர் சுகந்தமூர்த்தி பாடசாலை பழைய மாணவர்களும் தமது பாடசாலைக்கு வேண்டிய பணிக்கு நிதி சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

## மரண அறிவித்தல்



## திருமதி இரத்தினம் பரமேஸ்வரி

காரைநகர் சத்திரந்தை களபூமியை பிறப்பிடமாகவும், வாரிவளவை வதிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் பரமேஸ்வரி அவர்கள் 24.06.2010 வியாழக்கிழமை அன்று சிவபாதமடைந்தார். அன்னார், காலஞ்சென்ற கந்தையா, வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், வேலும்பிள்ளை இரத்தினம் (முன்னைநாள் வர்த்தகர் பதுளை விநாயகர் ஸ்டோர்ஸ்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (பாலத்துறை), சின்னத்துரை, தங்கம்மா ஆகியோரின் அன்பு சகோதரியும், கணேசலிங்கம் (கனடா), சுந்தரலிங்கம் (இரட்ணம் ரெக்ஸ்டைல்ஸ் நெல்லியடி-இலங்கை), தியாகலிங்கம் (நோர்வே), சறோஜினிதேவி (இலங்கை), விஜயலிங்கம் (கனடா), யோகேஸ்வரி (ஆசிரியை மானிப்பாய் மகளிர் கல்லூரி - இலங்கை) ஆகியோரின் பாசமிகு தயாரிரும், பூங்குலரூபி, சிவனேஸ்வரி, புஷ்பராணி, தர்மலிங்கம், துஷ்யந்தினி, கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், கணதீபன், குமாரன், கஜலக்ஷன், மயூரன், ஆரதி, ஆகீஷன், அனுகூ ஜன், அருந்தஷா, தனுஷியா, வித்தியா இவினோகரன், பிரணவன், சாதனா, நாராயணி, அபிராமி ஆகியோரின் அனபுப்பேத்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இறுதிக்கிரியைகள் 27.06.2010 ஞாயிற்றுக்கிழமை அன்று அவரது இலத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் காதரைநகர்சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது.

தகவல்: மகன் கனேசலிங்கம் கனடா


# விபரீதப்பிரதேசம்

காரைநகர் புண்ணிய பூமி அறம் செய்வதில் சிறந்தவர்கள் ஆவார்கள். ஆனால் கடந்த கால யுத்தத்தின்பின் பலகோடி அனுபவத்தை ஒவ்வொருவரும் கற்றிருந்தும், எமக்கு என்னதான் வந்து போனாலும் நாம் திருந்தப் போவதில்லை ஏனெனில் நாங்கள் ஜடங்கள். அண்மையில் காரைநகரிலுள்ள காரைநகர் அபிவிருத்திச்சபையின் புதிய சபை தெரிவு இடம்பெற்றது இதை உலகம் அறியும். ஆனால் பழைய நிர்வகத்தினரின் அசமசந்த போக்கினால் புதிய சபை இயங்க முடியாமல் ஸ்தம்பித்து நிற்கிறது.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக"

புலம் பெயர் வாழ் காரைநகர் மக்கள் மிகவும் வேதனையும் மனச்சோர்வும் அதிருப்பதியும் அடைந்துள்ளார்கள். உலகில் பல நாடுகள் வளர்ச்சியில் விண்ணைத் தொடுகிறார்கள் ஆனால் நாங்கள் மண்ணைக்கூட தொட முடியாமல் பரிதவிக்கிறோம்.?

## மரண அறிவித்தல்



## எஸ்.வி. முருகேசு

காரைநகர் பிரபல வர்த்தகர் எஸ்.வி. முருகேசு அவர்கள் கொழும்பில் காலமானார். காரை நகர் களபூமியைப் பிறப் பிடமாகக்கொண்ட சண்முகம் விசுவநாதர் முருகேசு அவர்கள் தமது 87வது வயதில் 16.08.2010 அன்று கொழும்பில் காலமானார். சுமார் 60 ஆண்டகாலம் வர்தகத்துறையில் பிசித்திபெற்றிந்தவர் அன்னாரது வர்த்தக வளர்ச்சி அபரிமதமானது. காரைநகர் வர்த்தகர்களுக்குப்பெருமை தேடிய வர்த்தகப்பெருமகன். அன்னார் சண்முகம் விசுவநாதனர் பார்வதி தம்பதிகளின் புதல்வர் காலஞ்சென்ற இராஜம்மாவின் அன்புக்கணவர் நாகேஸ்வரி தங்கராசா, இராஜேஸ்வரி, நடராசா, தங்கரத்தினம், பூமணி, குணர த்தினம், சதானந்தம், சிவானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் 19.08.2010 அன்னாரது கொழும்பு இல்லத்தில் நடைபெற்று கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தொடர்பு: குணரத்தினம் (மகன்) 94 1125 80061

# முருகனுக்கு காண்டாமணி

காரைநகர் திக்கரை முருகன் ஆலயத்திற்கு லண்டன் வாழ் சிவா மகேசனின் ஏற்பாட்டின் கீழ் 20 லட்சம் ரூபா செலவில் லண்டனிலிருந்து இவ்காண்டா மனி காரைநகர் திக்கரை முருகனுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

# பேய்கள் உலாவுவதாக தகவல்

காரைநகர் களபூமி விளானை மற்றும் கருங்காலி, பலிகாடு போன்ற பகுதிகளில் இரவு வேளைகளில் பேய்கள் நடமாடுவதாகவும் இதை பார்த்த சிலர் சுகவீனம் அடைந்திருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.



# மாணவர் பக்கம்

## மாணவர்களே! நீங்களும்........



மாணவர் பக்கத்திற்கு உங்களின் கவிதை, கட்டுரை கதை, சிறுகதை, விடுகதை, பழமொழிகள், பொன்மொழிகள், பொது அறிவு விவேகம், ஓவியம் போன்றவை "காரை ஆதித்தியனில்" இடம்பெற நீங்கள் செய்ய வேண்டியது: பின்வரும் படிவத்தை பூர்த்தி செய்து ஆக்கத்துடன் உங்கள் படத்தையும் இணைத்து கீழே உள்ள விலாசத்திற்கு அனுப்பி வையுங்கள்.

பாடசாலை :..............................

மாணவர் பெயர்:..............................

தரம் :..............................

ஆசிரியர்

பெயர் :..............................

திகதி :.................... கையொப்பம் :....................

மாணவர் பக்கம்
"காரை ஆதித்தியன்"
த.தயாபரன்,
இல. 5, 6/2
உருத்திரா மாவத்தை,
வெள்ளவத்தை,
கொழும்பு06.

## கற்கால மனிதர்கள் கடல் பயணம் செய்தார்களா?

ஆசியக் கண்டத்திற்கும் ஆஸ்திரேலியக்கண்டத்திற்கும் இடை யில் சுமத்ரா, ஜாவா, பாலி, லம்போக், சும்பவா, புளோரஸ், திமோர் என வரிசையாகப் பல தீவுகள் அமைந்திருக்கின்றன. இதில் புளோரஸ் என்ற தீவில் உள்ள ஒரு குகையில் இருந்து பதினெட்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மூன்று அடி உயரமேயுள்ள கற்காலக்குள்ள மனிதர்களின் எலும்புகளையும் அவர்கள் பயன்படுத்திய கற்கரு விகளையும் ஆஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்த மானிடவியல் ஆராய்ச்சியாளர்கள் அகழ் வாராய்ச்சியில் எடுத்திருக்கின்றனர்.

ஏற்கனவே திமோர் தீவில் இருந்தும் தீவுக்கண்டமான ஆஸ்திரேலியாவில் இருந்தும் நாற்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த கற்கால மனிதர்களின் எலும்பு களையும் கற்கருவிகளையும் ஆராய்ச்சியாளர்கள் எடுத்திருக்கின்றனர். அறுநூறு அடி ஆழமுள்ள கடல் பகுதியால் பிரிக்கப்பட்டிருக்கும் இந்தியாவிலும் இலங்கையிலும் கூட கற்கால மனிதர்களும் எலும்புகளும் கற்கருவிகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கடல் மட்டம் அறுநூறு அடி தாழ்வாக இருந்த பொழுது கற்கால மனிதர்கள் இந்தியாவில் இருந்து இலங்கைக்குச்சென்றிருக்கிறார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

## உங்களுக்குத் தெரியுமா? தமிழர்

தமிழ் பேசும் மக்கள் தமிழர் (Tamils, Tamilians) ஆவர். தமிழர்கள் ஏறத்தாழ 2300 ஆண்டுகளுக்கு மேற்பட்ட எழுதப்பட்ட வரலாற்றைக் கொண்ட திராவிடர் இனக்குழுவைச் சேர்ந்தவர்கள். மிகப்பழைய தமிழ்ச் சமுதாயங்கள் ஆகும். உலகம் முழுவதிலும் இன்று தமிழர் பரவி வாழ்ந்தாலும் அவர்களது தாயகம் தமிழ் நாடு, இலங்கை ஆகும். 1800களில் பிரித்தானிய குடியேற்றவாத அரசால் பெருந்தோட்டப்பயிர்ச்செய்கைக்காக தென்னிந்தியாவிலிருந்தும் இலங்கையின் வடபகுதியிலிருந்தும் குறிப்பிடத்தக்க அளவில் தமிழர்கள் மலேசியா, பர்மா, சிங்கபூர் போன்ற நாடுகளில் குடியேற்றப்பட்டார்கள். இவ்வாறே ஆபிரிக்க நாடுகள் பலவற்றிலும் தமிழர்கள் குடியறியுள்ளார்கள். 20ஆம் நூற்றாண்டில் தொழில் வாய்ப்புகள் பெற்று நடுஆசிய நாடுகளுக்குச் சென்று வசிக்கின்றனர். 1950களின் பின்னர் தமிழர் தொழில் வல்லுனர்களாக ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்கு புலம் பெயர்ந்தனர். 1983 இலங்கை இனக்கல வரங்களில் பாதிக்கப்பட்டு பெருமளவு ஈழத் தமிழர் கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா என்னும் நாடுகளில் சென்று வாழ்கிறார்கள். உலகில் சுமார் 77 மில்லியன் தமிழர்கள் வாழ்ந்து வருவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

### அதிக மக்கள் உள்ள இடம்

இந்தியா (India) 61.5 மில்லியன் (6.32%)
இலங்கை (Sri Lanka) 2.7 மில்லியன் (18%)
மலேசியா (Malaysia) 1.06 மில்லியன்
தென்னாபிரிக்க குடியரசு 250 000
கனடா 50 000
ஐக்கிய இராச்சியம் 250 000
அமெரிக்க ஐக்கிய நாடுகள் 100 000
பிரான்ஸ் 100 000
ரியுனியன் 120 000
சிங்கப்பூர் 31000
மொரிசியஸ் 31000



## யார் இந்த புருனோ?

கி.பி.154 ஜியார்டானோ புருனோ.!! நம்மில் யாருக்காவது இந்தப்பெயரைத்தெரியுமா? எந்தக்குழந்தையும் புருனோபற்றி பள்ளிப்பாடப் புத்தகத்தில் படித்தது இல்லை.

பொதுவாக யாரும் அவரைப்பற்றி பேசுவதும் இல்லை. மறக்கப்பட்ட விஞ்ஞானி இவர் உலகம் உருண்டை, பூமி சுற்றுவதால்தான் இரவு பகல் ஏற்படுகிறது சூரியன்தான் சூரியமண்ட லத்தின் மையம் சூரியனை மையமாக வைத்தே பூமி சுழன்று கொண்டு இருக்கிறது விண்வெளியில் தெரியும் விண்மீன்களைப் போன்றதே சூரியன் எல்லா விண்மீன்களுக்கும் பூமி போல் கோள்கள் உண்டு இந்த பிரபஞ்சம் எல்லையற்றது என்ற கருத்துக்களை உலகத்தின் கண் முன்னே முதன்முதல் படைத்த விஞ்ஞானி ஜியார்டானோ புருனோ அதற்காக அவருக்குக் கிடைத்த மிகப்பெரிய பரிசு என்ன தெரியுமா?

ரோம் நகர கிறித்தவ திருச்சபை புருனோவை உயிருடன் பட்டாசு கொழுத்தி எரித்துக்கொண்டாடியது. புருனோ உலகை விட்டுப்போன 7 ஆண்டுகளுக்குப்பின் அவருக்கான சிலை நோலாவில் வைக்கப்பட்டது. சந்திரனில் காணப்படும் கிரேட்டர் கள் பள்ளதாக்குகளில் ஒன்றுக்கு "ஜியார்டானோ புருனோ" என்று பெயரிடப்பட்டுள்ளது.



இதன் விட்டம் 20 கி.மீ உடல் பிரிந்தாலும் புருனோவின் கருத்துக்களே 20ஆம் நூற்றாண்டின் விஞ்ஞானிகளுக்கு வானவியல் பற்றிய விதைகளாக விளைநிலங்களாக வெளிப்பட்டன.

## புதிய கண்டுபிடிப்புக்கள்

- நாக்பூர் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் கீழ் இயங்கும் கோவிக்யான் அனுசந்தன் கேந்திரா பசுவின் சிறு நீரிலிருந்து புற்றுநோய்க்கு மருந்து கண்டுபிடித்துள்ளது. அமெரிக் காவிடமிருந்து இதற்கான காப்புரிமையை பெற்றுள்ளது. கோ விக் யான் தேசிய சுற்றுச்சூழல் பொறியாளர் ஆராய்ச்சி மையத்துடன் இணைந்து பசுவின் சிறுநீரிலிருந்து மருந்து கண்டு பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டது. இதன்படி காமதேனு ஆர்க் என்ற பிராண்டின் கீழ் நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் புற்றுநோயை தடுப்பதற்கான மருந்துகளை கண்டுபிடித்துள்ளது.
- விமான விபத்துகளைத் தவிர்க்க உதவும் அல்கோரிதம் என்ற கருவியினை இந்திய அறிவியல் கழகத்தில் ஏரோ ஸ்பேஸ் பிரிவில் இணைப் பேராசிரியராக இருக்கும் விஞ்ஞானி ராதாகண்ட்பதி கண்டுபிடித்துள்ளார்.
- விமானங்களில் இருக்கும் கருப்பு பெட்டியைப்போல கார்களிலும் இடம்பெறும் வகையில் எக்ஸ் வியூகே3 என்று பெயரிடப்பட்டுள்ள கருப்புப்பெட்டியினை ஜப்பானைச்சேர்ந்த கான்வ்கா நிறுவனம் தயாரித்துள்ளது.
- பயனம் செய்யும் போது வழிகாட்டப் பயன்படும் வகையில் டாம்டாம் ஸ்டார்ட் 2 என்ற வழிகாட்டும் கருவியினை இங்கிலாந்து நிறுவனம் விற்பனைக்குக் கொண்டுவந்துள்ளது.
- சிக்கலான அறுவைச்சிகிச்சைக்குப் பயன்படும் வகையில் டி.என.ஏ.ஸ்பைடர் என்ற ரோபோவினைக் கொலம்பியா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளனர்.
- மவுனமொழியில் பேசினாலே எதிர்முனைக்குத் குரலைத் (உதடு மற்றும் முக அசைவுகளை வைத்து) தெரிவிக்கும் செல்பேசியை ஜெர்மனியில் உள்ள காரல் ஸ்ருகி தொழில்நுட்ப நிலையத்தினர் கண்டுபிடித்துள்ளனர்.
- சைக்கிள் சக்கரம் சுற்றும் போது அதிலிருந்து முன் விளக்கு (டைனமோ) எரிவதைப்போலவே தேவையான மின்சாரத்தைக் கிரகித்துக்கொள்ளும் செல்பேசியினை நோகியா நிறுவனம் நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டாமில் அறிமுகம் செய்துள்ளது.
- விரலின் வெப்பநிலையை வைத்து ரத்த ஓட்டத்தின் அளவைக்கணித்து கார்டியோவாஸ்குலார் எனப்படும் இதய பாதிப்பைக்கண்டுபிடிப்பதற்கு வென்டிஸ் (Vendys) என்ற கருவியினை விஞ்ஞானிகள் கண்டுபித்துள்ளனர்.

## கணனி



அனைவருக்கும் கணினி எனும் தொனிப்பொருளை அடிப்படையாகக்கொண்டு உலகின் மிகவும் மலிவான கணினியைத்தாம் தயாரித்து வருவதாக இந்திய ஊடகத்தகவல் நிலையம் தெரிவிக் கின்றது. இதன் விலை வெறும் 35 டொலர் மட்டுமே எனவும் மாணவர் நலன் கருதி இவ்விலை 20 டொலர் வரை குறையலாமெனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இக்கணினி 2011ஆம் ஆண்டளவில் சந்தைக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் முக்கிய நோக்கம் இந்திய கல்லூரி மாணவருக்கிடையில் பாடவிதான ரீதியில் ஒரு தொடர்பை ஏற்படுத்துவதாகும்.

ஆசிரியர்: உங்க பையன் ஆங்கிலத்தில் படு வீக்கா இருக்கான் சார்.
பையனின் தந்தை: தமிழிலே எப்படி இருக்கான்னு சொல்லுங்க சார்
ஆசிரியர்: தங்கள் மகன் ஆங்கிலத்தில் மிகவும் வலுவிழந்து இருக்கின்றான் ஐயா.

ஆக்கம்: ரவி செல்லத்துரை-சுவிஸ்



1. எனது அம்மா எனக்கு நன்கு செய்யப்பட்ட வேலையை கற்பித்துக்கொடுத்தார்.
2. எனது அம்மா எனக்கு சமயம் கற்பித்துக்கொடுத்தார்.
3. எனது அம்மா எனக்கு இடைப்பட்ட காலத்திற்குள் பிரயாணம் செய்வதைப்பற்றி கற்பித்துக் கொடுத்தார்.
4. எனது அம்மா எனக்கு தாக்க சாஸ்திரம் கற்பித்துக் கொடுத்தார்.
5. எனது அம்மா எனக்கு தாக்க சாஸ்திரம் கற்பித்துக் கொடுத்தார்.
6. எனது அம்மா எனக்கு தூரதிருஷ்டியை கற்பித்துக்கொடுத்தார்.
7. எனது அம்மா எனக்கு விதியின் திருவிளை யாடல் பற்றி கற்பித்துக் கொடுத்தார்.
8. எனது அம்மா எனக்கு விஞ்ஞானத்தில் சவ்வூடு பரவல் பற்றி கற்பித்துக் கொடுத்தார்.
9. எனது அம்மா எனக்கு முறுக்கிய உடல் பற்றி கற்பித்துக் கொடுத்தார்.
10. எனது அம்மா எனக்கு சகிக்கும் தன்மை, ஆற்றல் ஆகியவற்றை கற்பித்துக்கொடுத்தார்.
11. எனது அம்மா எனக்கு கால நிலை பற்றி கற்பித்துக் கொடுத்தார்.
12. எனது அம்மா எனக்கு கபடம், பாசாங்கு செய்தல் கற்பித்துக்கொடுத்தார்.
13. எனது அம்மா எனக்கு வாழ்க்கையின் வட்டம் பற்றிக்கற்பித்துக் கற்பித்துக்கொடுத்தார்.
14. எனது அம்மா எனக்கு பழக்கவழக்கங்களை எப்படி மாற்றுவது பற்றி கற்பித்துக் கொடுத்தார்.
15. எனது அம்மா எனக்கு பொறாமை, பகை பற்றி கற்பித்துக்கொடுத்தார்.
16. எனது அம்மா எனக்கு எதிர் பார்த்தல் பற்றி கற்பித்துக் கொடுத்தார்.
17. எனது அம்மா எனக்கு எப்படி பெற்றுக்கொள்வது பற்றி கற்பித்துக் கொடுத்தார்.
18. எனது அம்மா எனக்கு மருத்துவ விஞ்ஞானம் பற்றி கற்பித்துக்கொடுத்தார்.
19. எனது அம்மா எனக்கு
20. எனது அம்மா எனக்கு நகைச் சுவை பற்றி கற்பித்துக் கொடுத்தார்.
21. எனது அம்மா எனக்கு எப்படி பெரிய மனிதனாக வருவது எனக்கற் பித்துக்கொடுத்தார்.
22. எனது அம்மா எனக்கு மரபு நூல் பற்றிக்கற்பித்துக் கொடுத்தார்.
23. எனது அம்மா எனக்கு வேர் பற்றி கற்பித்துக்கொடுத்தார்.
24. எனது அம்மா எனக்கு புத்தியுடைய பற்றி கற்பித்துக்கொடுத்தார்.
25. மேலும் எனது விருப்பமான எனது அம்மா எனக்கு நீதி, நேர்மை பற்றி கற்பித்துக்கொடுத்தார்.

# மீன்களுக்கு ஆபத்தான சூழ்நிலை ஏற்படுவதாக லண்டன் கடல் வாழ் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்



ரசாயன கழிவுகள், சாக்கடை, குப்பைகள் போன்றவை கடலில் கலக்கின்றன. இதனால் அதில் வாழும் மீன்கள் போன்ற கடல் வாழ் உயிரினங்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. ரசாயன பொருட்களில் உள்ள "அசிட்" கலப்பதால் மீன்களுக்கு ஆபத்தான சூழ்நிலை ஏற்படுகிறது. இந்த தகவலை கடல் வாழ் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். கடல்நீரில் அசிட் கலப்பதால் அதில் அசுத்தமான காபன்டை ஒக்சைட் அதிக அளவில் கலக்கிறது.

இதனால் அதில் வாழும் மீன்கள் நுகரும் தன்மையை இழந்து வருகின்றன. மீன்கள் குஞ்சுகளாக இருக்கும் போதே அத்தன்மை உருவாகி வருகிறது. எனவே அவை நுகரும் சக்தியை இழக்கின்றன. இதன் மூலம் தங்கள் உணவை தேடி பிடிக்கும் சக்தியை இழக்கின்றன. அதே வேளையில் எதிரிகளிடம் இருந்து தங்களை காப்பாற்றி கொள்ளும் மோப்ப சக்தியையும் இழக்க நேரிடுகிறது எனவே அவை செத்து மடியும் நிலை அதிக அளவில் ஏற்பட்டுள்ளது.

# காது



ஒவ்வொரு உறுப்புக்கும் உள்ள முக்கியத்துவம் காதுக்கும் உண்டு. கேட்கும் திறனோடு உடல் வெப்பத்தைக்கட்டுப்பாட்டில் வைக்கவும் தள்ளாடாமல் இயல்பாக நாம் நிற்கவும் கூட இதின் பங்களிப்பு ரொம்ப முக்கியம் கேட்கும் திறன் என்று வந்துவிட்டால் இந்த உலகோடு நாம் தொடர்புகொள்ளும் முக்கிய இயந்திரமாகவே இது உணரப் படுகிறது. இருட்டோ, வெளிச்சமோ எதன் பொருட்டும் இதன் வேலை பாதிக்கப்படுவதில்லை. இது தன் வேலையைச்சரியாகச் செய்து கொண்டிருப்பதால் அதன் முக்கியத்துவத்தை நாம் உணராமலிருக்கின்றோம்.

கொஞ்ச நேரத்துக்கு காதை அடைத்துக் கொண்டு இருங்கள் அப்போது அதன் மகத்துவம் புரியும். காது கேளாமையை தடுக்கும் முறைகள் செல்போனில் நீண்ட நேரம் பேசுவதை அதிக சத்தத்துடன் பாட்டு கேட்பது நல்லதல்ல வீடு அலுவலகந்த வரை போன்களை பயன்படுத்த வேண்டும் சூடாகும் செல்போன்கள் நல்லதல்ல அது 'கேட்கும் மையாக பாதிக்கும் சமீபகாலமாக செல் போன் கேளாமை கோளாறில் சிக்குவோரின் எண்ணிக்கை பெ

ங்களில் முடி அடிக்கடி திறனை கடு மூலம் காது ருகி வருகிறது.

# கர்ப்பினி பெண்கள் அதிக அளவில் முட்டை சாப்பிட வேண்டும்.



முட்டை உடல் நலத்திற்கு சிறந்தது அனைத்து வயதினரும் சாப்பிடுவதற்கு ஏற்ற உணவு என்பது அனைவரும் அறிந்ததே அதே நேரத்தில் முட்டை சாப்பிடும் பெண்களுக்கு பிரசவ காலத்தின் போது இதய நோய்கள் தாக்குவது பெருமளவில் குறையும் இந்த தகவலை தற்போது நடத்தப்பட்ட ஆய்வு தெரிவிக்கின்றது. முட்டையில் "சோலின்" என்ற திரவவடி விலான சத்துப்பொருள் பெருமளவில் உள்ளது.

இது விட்டமின் "டீ" Complesக்கு இணையானது. "சோலின்" என்ற சத்து இதய நோயை கட்டுப்படுத்தும் திறன் கொண்டது. எனவே கர்ப் பினி பெண்கள் அதிக அளவில் முட்டை சாப்பிட வேண்டும் என கார்னல் பல்கலைக்கழகத்தை சோந்த பேராரியர் மேரி காடில் என்பவர் தலைமை யிலான குழுவினர் தெரிவித்துள்ளனர்.

# குறை பிரசவத்தில் பிறந்த பெண் குழந்தைக்கு மூளைச்சாவு

ஐதராபாத் முதன் முறையாக பிறந்து நான்கே நாட்களான குழந்தையின் கண் மற்றும் இதய வால்வுகள் தானம் செய்யப்பட்டுள்ளன. குழந்தைக்கு சிகிச்சையளித்த டாக்டர்கள் கூறுகையில் இதய வால்வுகளே இல்லாமலோ அல்லது குறை பாடுடைய வால்வுகளுடனோ பிறந்த குழந்தைகள் இந்த குழந்தை தானம் அளித்ததன் மூலம் பிழைத்துக்கொள்ள வாய்ப்பிருக்கிறது. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் செயற்கை வால்வுகள் விலை அதிகமானவை என்பதோடு இயற் கையானவை போல பொருத்திச்செயல்படும் வாய்ப்புகளும் குறைவு இப்போது இக்குழந்தையின் தானத்தால் இரண்டு குழந்தைகளுக்கு இதய வால்வுகளும் கண்களும் கிடைத்து அவை புது வாழ்க்கை யைத்தொடங்கும் என்றார் நாட்டில் மிக மிக இளம் வயதில் தன் உறுப்புக்களை த்தானம் செய்தவர் என்ற பெருமையுடன் அக்குழந்தை இம்மண்ணில் தன்தானம் மூலம் அழியதப்புகழையும் விட்டுச்சென்றுள்ளது.

# கண்பார்வைக்கோளாறு ஏற்படக் காரணம்



""கண்களை போற்றிப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும்""

உறவினர் முறையில் திருமணம் செய்பவர்களின் குழந்தைகளுக்குகண்பார் வைக் குறைபாடு ஏற்படுகிறது.

கருவிலிருக்கும் போது குழந்தைக்குத் தேவையான ஊட்டச் சத்து குறைப்பாட்டாலும் பார்வைக்கோளாறு ஏற்படுகிறது.

சரியான உணவு உண்ணாமல் இரத்தச் சோகை ஏற்பட்டாலும் பார்வைக் குறைபாடு உண்டாகும்.

தூக்கமின்மை யாலும் மங்கிய ஒளி அல்லது கண் கூசும் அளவு வெளிச்சம் உள்ள இடங்களில் வேலை செய்பவர்களுக்கும் கண் பார் வைக் குறைபாடு உண்டாகும்.

தற் போதைய கணினி உலகில் கண்களுக்குத்தான் அதிக வேலை உண்டா கிறது.

இரவு கண்விழித்து கணினி முன் அமர்ந்து அதிக நேரம் வெலை செய்பவர்களுக்கு கண் குறைபாடு எளிதில் உண்டாகும்.

ஈரல் பாதிக்கப்பட்டு பித்தம் அதிகரித்தால் முதலில் தாக்கப்படுவது கண்பார்வை நரம்புகளே இதனால்தான் காமாலை நோய்களின் அறிகுறி கண்களில் தெரியவரும். மது, புகை, போதைப்பொருள்கள் உண்பவர்களின் கண்கள் எளிதில் பாதிப் படையும் தொலைக் காட்சியின் முன்

அமர்ந்து அதிக நேரம் தூக்கமில்லாமல் நிகழ்ச்சிகளை பார்ப்பவர்களின் கண்கள் வறட்சி கண்டு கண்பார்வை குறைபாடு உண்டாகும்.

நீரிழிவு நோய்க்காரர்களுக்கும் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கும் கண்பார் வைக் குறைபாடு உண்டாகும்.

அடிக்கடி தலை வலி,தலைச்சுற்றல், கிறுகிறுப்பு உள்ளவர்களுக்கும் கண்பார் வைக் குறைபாடு உண்டாகும்.

அதிக மனஅழுத்தம், டென்ஷன் கூட பார்வை நரம்புகளைப் பாதிக்கும் எனவே மன அழுத்தம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

## மனோத்தத்துவ கணக்கீடு

# மூளையை ஸ்கேன் செய்து எதிர்கால திட்டத்தை தீர்மானிக்கலாம் -ஆய்வில் தகவல்



மூளையை ஸ்கேன் செய்து எதிர்கால திட்டத்தை தீர்மானிக்க முடியும் என விஞ்ஞானிகள் தெரி வித்துள்ளனர்.

எதிர்காலம் குறித்து திட்டமிட முடியாமல் பலர் குழம்புகின்றனர் இனி அந்த கவலை தேவை இல்லை.

மூளையை ஸ்கேனிங் செய்து அதன் மூலம் எதிர்கால திட்டங்களை மற்றும் லட்சியங்களை கணிக்க முடியும் இதற்கான ஆய்வை கலிபோர்னியா பல் கலைக்கழக நரம்பியல் விஞ்ஞானிகள் மேற்கொண்டனர். இவர்கள் மனிதனின் மூளையில் புதிதாக மேப்பிங் முறையை பயன்படுத்தினார் அதன் மூலம் அவர்களின் மனதில் எதிர் காலத்தில் அவர்களின் லட்சியம் என்ன?

எந்தவிதமான பாடப் பிரிவை எடுத்து படித்து நிபுணராக முடியும் என்று கணித்துள்ளனர்.

இதற்கு "மனோதத் துவ கணக்கீடு" என்று பெயரிட்டுள்ளனர் இது குறித்து மனநல பேராசிரியர் ரிசசர்டு ஹையர் ஒரு ஆய்வு நடத்தினார்.

ஒருவருக்கு உள்ள திறமை மற்றும் தனித்தன்மை என்ன என்று மூளைக்குத்தான் தெரியும் எனவே மூளையை ஸ்கேன் செய்வதன் மூலம் இதை கண்டறிய முடியும் என்று தெரிவித்துள்ளார்.

இதற்காக அவர் 6 ஆயிரம் பேரின் மூளையை ஸ்கேன் செய்து ஆய்வு மேற்கொண்டார்.



ஆசிரியர்: நியுட்டன் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருக்கும்போது அவர் தலையில் ஒரு ஆப்பில் விழ அவர் புவியீர்ப்பு விசையைக்கண்டு பிடித்தார்.

இதிலிருந்து என்ன தெரிகிறது?

மாணவன்: இப்படி வகுப்பறையில் உட்கார்ந்துக்கிட்டு சும்மா புத்தகத்தைப்புரட்டிக்கிட்டு இருந்தா ஒண்ணும் கண்டு பிடிக்க முடியாதுன்னு தெரியுது...

ஆக்கம்: ரவி செல்வத்துரை-சுவிஸ்

# அலுவலகம் புது வீதியில்...

புலம் பெயர்நாடுகளில் வாழும் காரைநகர் மக்களின் நலன்புரிச்சங்கங்களின் சங்கமச்சங்கமாக காரைநகர் அபிவிருத்திச் சபையின் உத்தியோக பூர்வ அலுவலகம் காரைநகர் புது வீதியில் அமைந்துள்ளது. நலன் விரும்பிகள் தங்கள் குறைகளை யோ செய்ய வேண்டிய வேலைத்திட்டங்கள் பற்றிய ஆலோசனைகள் விருப்பு வெறுப்புக்களை தாங்கள் (கைப்பட எழுதி) நிலமைகள் எழுத்து மூலம் கொடுக்கும்படி புலம் பெயர் சங்கங்கள் கேட்டுக்கொள்கின்றன. அலுவலகம் திறக்கும் நேரமும் செயல்பாட்டுக்கு வர இருப்பதோடு தொலைபேசி இலக்கம் மின்அஞ்சல் போன்றவையும் உள்ளன என்பதை அறியத்தருகிறார்கள். தொலைபேசி இலக்கம்: 021-3214890

# விரைவில் வர்த்தக வங்கி

காரைநகர் மேற்கு வீதி பழைய கண்டியில் விரைவில் இலங்கை வர்த்தக வங்கியின் கிளை திறக்கப்படவுள்ளது அதற்கான கட்டிட வேலைப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன்.

## வயல் வாய்க்கால் மண் எடுக்கப்படும்

லண்டன் நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டின் அடிப்படையில் காரைநகரிலுள்ள வயல் வெளியில் காணப்படும் நீர்ஓடை வாய்க்கால் மண் எடுக்கப்பட்டு அவை சுகந்தர மூர்த்தி பாடசாலை விளையாட்டு மைதானம் நிரப்ப பயன்படும் என அறிவிக்கப்பட்டள்ளது.

# ஊர் திரும்பும் காரைநகர் மக்கள்...!

கடந்த காலத்தில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து வாழ்ந்த காரைநகர் மக்கள் மீண்டும் காரைநகருக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றனர். இதனால் காரைநகரில் கைவிடப்பட்ட நிலையிலிருந்த குடியிருப்புக்கள் மீண்டும் புத்துயிர் பெறுகின்றன. அழகுப்படுத்தப்படுகின்றன மக்கள் மீளக்குடியேறுகிறார்கள். குடியிருப்புக்களுக்கு மீளச்செல்லாதவர்கள் குடியிருப்பு பகுதிகளை சுத்தம்செய்து ஒழுங்குபடுத்துமாறும் காரை நலன் விரும்பிகள் சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# வேலை ஆட்களுக்கு தட்டுப்பாடு

காரைநகரில் வேலை ஆட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிழவுகிறது. கடந்த கால யுத்தஅனர்த்தங்களால் மக்கள் இடம் பெயர்ந்து சென்று மீண்டும் அவர்கள் ஊர் வருகையில் வேலைகள் அதிகமாக இருக்கின்றன ஆனால் வேலையாட்கள் மிகக்குறைவாகவே காணப்படுகின்றனர். இதனால் மக்கள் தங்கள் குடியிருப்புக்களை மீள் அமைப்பதற்கு பெரும் சிரமப்படுகிறார்கள். வேலைகள் எல்லாமே ஆமைவேகத்தில் செயல்படட்டு வருகின்றன. இதனால் விரைவில் இயந்திரங்கள் அறிமுகப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# துரித கதியில் பால வேலை



பொன்னாலைப்பால வேலைகள் இரவு வேளை களிலும் மின் ஒளி பொருத்தப்பட்டு துரிதகதியில் நடைபெற்று வருகின்ற. இவ்வருட ஆவணி மாதத்திற்கு முன்னதாக முடிக்கப்பட வேண்டியுள்ளதால் இப்பால வேலைகள் இரவு பகலாக துரிகதியில் நடைபெற்று வருகின்றன.

## புதிய தொலைத்தொடர்பு கோபுரங்கள்

காரைநகரில் மூன்று தொலைத்தொடர்பு கோபுரங்கள் அமைக்கப்பட உள்ளன. அதில் என்று தற்போது மல்லிகையில் அமைக்கப்பட்டு வருகின்றன. இதன் வேலைகள் முழுமை அடைந்த உள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

காரைநகர் ஈழத்துச் சிதம்பர திருவெம் பாவை மகா உற்சவம் டிசம்பர் 13ஆம் நாள் ஆரம்பமாகி டிசம்பர் 22இல் நிறைவு பெறுகின்றன. தேர் உற்சவம் டிசம்பர் 21

# ஆவணி இறுதியில் திறப்பு விழா!

காரைநகர் புன்னாலைப் பாலம் வேலைகள் தூரிதமாக செயல்பட்டு வருகின்றன. இவ்அகல வீதி காரைநகர் வலந்தலை அரசினர் வைத்தியசாலை வரை அகலிக்கப்பட்டு வீதி வேலைகள் இடம்பெறுகின்றன உத்தியோக பூர்வமாக இவ்வீதி போக்குவரத்துக்காக ஆவணி இறுதியில் கோலாகலமாக திறக்கப்பட இருக்கின்றது.

இதனிடையே காரைநகர் ஈழத்துச்சிதம்பர வீதி (புது வீதி) அகலிக்கபடவுள்ளது. அதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

# சேவையில் மினிபஸ்



காரைநகரில் பதினைந்து தனியார் பேருந்து பதின்மூன்று இ.போ.ச. பேருந்தும் சேவையில் ஈடுபட்டுள்ளன. யாழ். காரைநகர் போக்குவரத்துக்காக தனியாரிடம் மொத்தம் 22 மினிபஸ்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியாவில் தஞ்சமடைந்திருந்த காலத்துள் பிறந்த குழந்தைகளுக்கு பிரஜாவுரிமை வழங்கும் நிகழ்வு..!

யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து இந்தியாவில் தஞ்சமடைந்திருந்த காலத்துள் பிறந்த குழந்தைகளுக்கு பிரஜாவுரிமை வழங் கும் நிகழ்வு கடந்த 22ஆம் திகதி வவுனியாவில் நடைபெற்றது. 130 குழந்தைகளுக்கு பிரஜாவுரிமை சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

தொழில் நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியதின் கீழுள்ள நீதிக்கும் சமத்து வத்துக்குமான அமைப்பும் இணைந்து வவுனியாவில் நடத்திய நடமாடும் சேவையின் போதே சான்றிதழ்கள் வழஙகப்பட்டன.

## பிரித்தானியாவில் இலங்கைத்தமிழர் ஒருவர் விபத்தில் உயிர் இழந்துள்ளார்

இலங்கைத்தமிழர் விபத்தில் உயிர் இழந்துள்ளார். பிரித்தானியா வின் தலைநகர் லண்டனில் கடந்த செவ்வாய்க்கிழமை (20.06.2010) காலை இடம் பெற்ற வீதி விபத்தில் சிக்கிய இலங்கைத்தமிழர் ஒருவர் உயிர் இழந்து ள்ளார். பத்தி ரிகை விநியோக ஊழிய ரான இராஜேந்திரன் இராம கிருஷ் ணன் (வயது 35) என்பவரே பத்திரிகைகளை விநியோகிப் பதற்காக அதிகாலை 6.20 மணி யளவில் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது கார் ஒன்றில் இடிக்கப்பட்டார். தலையில் பலத்த காயங்களுக்கு உள்ளான அவர் உடனடியாக லண்டன் றோயல் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

ஆயினும் மாரடைப்பு ஏற்பட்டு வைத்திய சாலையில் இறநது விட்டார்.

அவர் மனைவியும் இரு குழந்தைகளும் இலங்கையில் இருக்கின்றார்கள்.

# இரத்த அழுத்தமா? என்ன சாப்பிடலாம்?



**இன்று** மனிதர்களை பல வகை யான நோய்கள் தாக்கு கின்றன. இவற்றில் இரத்த அழுத் தமும் நீரழிவு நோயும் முதன்மை வகிக்கிறது. இவ்விரு நோய்க ளால் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் 40 வயதைக்தாண்டி யவர்கள். நம் நாட்டில் 75 சதவி கிதம் பேர் இந்த நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நித்திய கண்டம் பூரண ஆயுசு என்ற பழமொழி போல் தினமும் இவர்களை கொஞ்சம் கொஞ்சமாக வாட்டும் நோய்தான் இந்த நீரிழிவு நோயும் இரத்த அழுத்த நோயும் ஒரு வருக்கு நீரி ழிவு நோயின் தாக்கம் இருந்தால் இரத்த அழுத்த நோயும் ஏற்பட வாய்ப்புண்டு. இந்த இரத்த அழு த்த நோயை மௌன கொலை யாளி என்று மருத்துவர்கள் கூறு கின்றனர். மனித உடலின் இரு தயம் ஒரு நிமிடத்திற்கு 72 முறை சுருங்கி விரிகிறது. இந்த சுருங்கி விரியும் தன்மை 120/80 வரை சரா சரி மனிதர்களுக்கு இருக்கும்.

இந்த சுருங்க விரியும் தன்மை அதிகரித்தால் அதிக இர த்த அழுத்த நோயும் குறைந்தால் குறைந்த இரத்த அழுத்த நோயும் ஏற்படுகிறது. சில சமயங்களில் மனம் அதிக உணர்ச்சி வசப்படும் போது இரத்தம் வேகமாக உள் வாங்கி வெளியேறுகிறது.

இதனால் இரத்த அழுத்தம் ஏற் படுகிறது. இதனை சித்தர்கள் பித்த வாத அழுத்தம் என்கின்ற னர். மனிதஉடலில் அமைந்துள்ள பித்த நீர் அதிகம் சுரந்து வாத நீருடன் கலந்து பித்த வாத அழுத் தத்தை ஏற்படுத்துகிறது. இதுதான் அதிக ரத்த அழுத்தம் என்கிறோம்.

அதே நிலையில் உடற்கூறு களுக்குத்தகுந்தவாறு வாத நீர் அதிகம் சுரந்து பித்த நீருடன் சேரும் போது வாத பித்த அழுத் தம் ஏற்படுகிது.

இதுவே குறைந்த இரத்த அழுத்தம் என்கிறோம். இரத்தத் தில் அதிகளவு கொழுப்பு சத்துக் கள் இருந்தால் அவை இரத்தக் குழாய்களில் படிந்து இரத்த த்தில் அழுத்தம் அதிகரித்து இரத்த அழுத்த நோய் ஏற்படுகிறது. பொதுவாக கோபம், கவலை, அச்சம் உள்ள வர்களை இரத்த அழுத்தம் அதிகம் தாக்குகிறது. உடல வலியும் இரத்த அழுத்தத்தை அதிகரிக்கும் தூக்க மின்மையும் இரத்த அழுத்தத்தை உண்டாக்கும் பெற்றோர்களில் யாரா வது ஒருவருக்கு இரத்த அழுத்த நோய் இருந்தால் அது குழந்தை களுக்கும் வர 25 சதவிகிதம் வாய்ப் புள்ளது.

அதிக இரத்த அழுத்த நோயாளி களின் உணவுக்கட்டுப்பாடு இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர் கள் உணவில் உப்பை குறைத்துக் கொள்ள வேண்டும். சர்க்கரை, இனி ப்பு பண்டங்களை உட் கொள்வதை குறைத்துக்கொள்ள வேண்டும்.

குளிரூட்டப்பட்ட பானங்கள், செய ற்கை வர்ணம் அல்லது வாசனை கலந்த உணவுகளை கண்டிப்பாக தவிர்க்கவேண்டும். கேன் களில் அடைத்த பதப்படுத்தப்பட்ட உணவு களை உண்ணக்கூடாது.

வெண்ணெய், நெய், கிரீம், மாமிசம் போன்ற கொழுப்புச்சத்து நிறைந்த பொருட்களை தவிர்ப்பது நல்லது. மது, புகை. போதைப்பொருட்களை முற்றிலும் தவிர்த்துவிட வேண்டும். உண வில் அதிகளவு கீரைகளும் காய்கறிகளும் சேர்த்துக்கொள்ள வேண்டும் காய்கறிகளில் பிஞ்சு வகைகளையே அதிகம் சாப்பிட வேண்டும். தினமும் 3 லிட்டர்தண் ணீர் அந்த வேண்டும் வாயுவை அதி கரிக்கச்செய்யும் கிழங்கு வகைக ளையும் பருப்பு வகைகளையும் குறைத்துக்கொள்ள வேண்டும். எளி தில் சீரணமாகக்கூடிய உணவுகளை உட்கொள்வது நல்லது மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக்கொள்வது மிகவும் அவசியம் நீர்ச்சத்து நிறை ந்த காய் கறிகளை அதிகம் சேர்த் துக்கொள்ள வேண்டும் பொதுவாக உணவுக்குப்பின் சிறிது பழவகைகள் உண்பது நல்லது அதில் திராட்சை அல்லது உலர்ந்த திராட்சை சாப் பிட்டு தூங்கச்சென்றால் நல்ல நித் திரை காணலாம். நல்ல நித்திரை ரத்த அழுத்தத் தைக்குறைக்கும். மனதை அதிகம் பாதிக்கும் இடங் களுக்குச்செல்வதையோ நிகழ்வு களைப் பார்ப்பதையோ தவிர்ப்பது நல்லது. இரவு படுக்கைக்குச்செல் லும் முன் சிறிது நேரம் அமர்ந்து தியானம் செய்து பின் பால்அரு ந்திவிட்டு படுக்கச் செல்ல வேண்டும். ஆரஞ்சு, திராட் சை,




வாழைப்பழம் போன்ற பழவகை களையும் நார்ச்சத்து நிறைந்த பழ வகைகளையும் அதிகம் சாப்பிட வேண்டும்.

குறைந்த இரத்த அழுத்த நோயாளிகளுக்கு பெட்ரோல் இல் லா வாகனம் என்பார் அதாவது வாக னத்தில் பெட்ரோல் இல்லாமல் போகும் போது வாகனம் எங்கு வேண்டு மானலும் நின்று போகலாம்.

அதுபோல்தான் குறைந்த இர த்த அழுத்த நோயாளிகளின் நிலை யும் அவர்கள் மிகுந்த கவனமுடன் இருக்க வேண்டும் சத்துக்கள் நிறை ந்த உணவு களையும் அதனை முறையாகவும் சாப்பிட்டு வரவேண் டும் சில நேரங்களில் இவர்களுக்கு தலைச்சுற்றல், மயக்கம், தூக்கம் போன்றவை ஏற்படும் உடல் சோம்ப லாகவே இருக்கும் உடலில் வலி ஏற்படும் அப்போது இவர்கள் சிறிது குளுக்கோஸ் கலந்த நீர் அருந்து வது நல்லது.

அல்லது சர்க்கரை கலக்காத எழுமிச்சை ஜூஸ் அருந்தலாம் கேழ் வரகு கூழ், கம்பு கூழ் மிகவும் சிறந் தது எலும்பு சூப் செய்து அடிக்கடி அருந்த வேண்டும். மது பானத்தை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

குறைந்த ரத்த அழுத்தத்தால் மயக்கம், தலைச்சுற்றல், ஏற்படும் போது மோரில் உப்பு கலந்து உடனே அருந்தினால் தெளிவு உண் டாகும். பாதாம் பருப்பு-2, முந்தரி பரு ப்பு-2, பேரிச்சை-2, உலர்ந்த திரா ட்சை-4 இவற்றை காலை மாலை என இருவேளையும் சாப்பிட்டு வந் தால் குறைந்த இரத்த அழுத்த பாதிப்பிலிருந்து விடுபட லாம்.

குடலில் வாயுத்தன்மை அதி கரிக்காமல் பார்த்துக்கொள்ள வேண் டும்.

மேல்கண்ட வழி களை முறைப்படி கடைப்பிடித்து வந்தால் ரத்த அழுத்த நோய்களின் பாதிப்பிலிருந்து விடுப் பட்டு ஆரோக்கியமாக வாழலாம்.

# பெண்களின் கருப்பை திரவம் எய்ட்ஸ் நோயை தடுக்கும்

-விஞ்ஞானிகள் தகவல்

பெண்களின் கருப்பை குழாயில் இருந்து வெளிவரும் திரவம் எய்ட்ஸ் நோயை தடுக்கும் சக்தி உள்ளதுஎன தென் ஆப்பிரிக்க விஞ்ஞானிகள் ஒரு ஆராய்ச்சியில் கண்டுபிடித்துள்ளனர். இது எய்ட்ஸ் பேரழிவின் சோகத்தில் இருந்து மக்களை காக்கும் என உலக சுகாதார நிறுவனத்தின் ஐ.நா.எய்ட்ஸ் திட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். எனவே இது எய்ட்ஸ் நோய்க்கு மருந்தாக பயன்படுத்தப்படும் வாய்ப்பு உள்ளது என விஞ்ஞானி கள் கருதுகின்றனர்.



# 31 வயதில் பெண்களின் அழகு அதிகரிக்கிறது

ஆய்வில் தகவல்

18 வயது முதல் 25 வயது வரை பெண்கள் அழ காக இருப்பார்கள் என்ற கருத்து பொதுவாக திகழ் கிறது. தற்போது பெண்க ளின் அழகு 30 வயதுக்கு மேல் அதாவது 31ஆவது வயதில்தான் அதிகரிக் கிறது என தெரிய வந்துள்ளது இது குறத்து லண்ட னில் ஒரு தனி யார் டி.வி. சனல் 2 ஆயிரம் ஆண்கள் மற்றும் பெண் களிடம் ஆய்வு நடத் தியது. இந்த வயதில் தான் 70 சதவீதம் தன்னம்பிக்கை யும் 67 சதவீதம் கவர்ச்சிகர மான பார்வையும் 47 சத வீதம் கவர்ச்சி கரமான தோற் றமும் ஏற்படு வதாக ஆய்வு தெரிவிக்கிறது.

மொத்தத்தில் 63 சத வீதம் பேர் அதாவது 3இல்2 பங்கு பேர் 31 வய தில்தான் பெண்கள் அழகாக இருப்ப தாக கூறியுள்ளனர்.

தற்போது பெண் களை போல் ஆண்களும் தங்கள் உடல் அழகு மற்றும் முக அழ கில் கவனம் செலுத்த தொடங் கியுள்ளனர்.

சிகை அலங்காரம் செய்ய சலூன் களுக்கும் உடல் அழகை பராமரிக்க ஜிம்களுக் கும் செல்கின்றனர்.

இதற்காக வாழ்க்கையில் முன்னேற தன்னம்பிக்கை மட் டும் போதாது அழகும் தேவை என்ற எண்ணமும் மக்களிடம் உருவாகியுள்ளது.



# அங்கே இப்படி சிரிக்க மட்டும் அல்ல!




அமெரிக்க நகரம் ஒன்றில் மூன்று கட்டங்களில் எலித் தொல்லை மிக அதிக மாக இருந் தது. ஒரு கூட்டம் நகர மன்றம். மற்றொன்று இரும்புச்சமான்கள் விற்கும் கடை மூன்றாவது கட்டடம் மாதா கோயில்.

நகர மேயர் பூனைகளைக் கொண்டு வந்து நகர மன்றத்தில் விட்டார். சில நாள் களில் எலிகள் தீர்ந்து போயின. தீனியும் வேலையும் இல்லாத பூனைகள் அப் புறப் படுத் தப் பட் டன. கொஞ்சக் காலத்திற்குப் பிறகு எலிகள் வந்து சேர்ந்து கொட்டம் அடித்தன.

இரும்புக்கடைக்காரர் எலிப் பொறி களை வைத்து எலிகளைப் பிடித்து நகரத்திற்கு வெளியே கொண்டுபோய்விட்டு வந்தார்.

ஜீவகாருண்யச்சங்கத்துக்காரர்ே பால! நகரத்திற்கு வெளியே விரட்டப்பட்ட எலிகள் மீண்டும் இரும்புக்கடைக்கே வந்து விட்டன.

மூன்றாவது கட்டடமான மாதா கோயில் பாதிரி எலிகளைப்பிடித்து ஞான ஸ்நானம் செய்து வைத்துக் கிறித்து வமத எலிகளாக்கி விட்டார்.

எலிகள் எல்லாம் இப்போ மாதா கோயில் பக்கம் கிறித்துமஸ் பண்டிகைக் கும் யேசு உயிர்த்து எழுந்து ஈஸ்டர் பண்டிகைக்கும் மட்டுமே வந்து போகின்றன.

மீதி நாள்களில் தேவாலயத் துக்கு வருவதில்லை - கிறித்துவர் களைப் போலவே!

அற்புதச்சுகம் அளிக்கும் சுவி சேஷப் பிரசங்க நிகழ்ச்சியில் பேசினார். கர்த்தரை விசுவாசிப் பதனாலே முடவன் நடக்கி றான் ஊமை பேசுகிறான் குருடன் பார்க் கிறான். உங்களில் யாருக்காவது நான் ஜெபம் செய்ய வேண்டுமா? என்று கேட்டார்.

ஒரு சிறுவன் கையை உயாத்தி னான். என்னிடம் வா என்றார் பிர சங்கி ஊன்று கோல்களை இரண்டு பூஜங்களுக்குக் கீழும் வைத்து ஊன்றி நடந்து வந்தான் சிறுவன். அதோ அந்தத் திரைக்குப்பின்னால் போய் நில் என்றார் பிரசங்கி. அவ னும் அங்கே போய் நின்றான்.

இன்னும் யாருக்காவது நான் ஜெபம் செய்யவேண்டுமா? எனக் கேட்டார் பிரசங்கி திக்கித் திக்கிப் பேசிய ஒருவன் நான் நல்லா... பே...சொ...வேணு..என் றான். நல்லது நீயும் திரைக்குப்பின்னால் நின்று கொள் என்றார் பிரசங்கி. திக்கு வாய்க்காரனும் போய் நின்றான்.

வேறு யாருக்காவது நான் ஜெபிக்க வேண்டுமா? என்றார் பிரசங்கி. ஒருவரும் பதில் கூறவில்லை.

உடனே பிரசங்கி தன் கைகளை உயர்த்தி என்னென்னவோ முணு முணுத்தார்... ஆண்டவரே, ஆண்ட வரே என்னும் புலம்பல் சத்தம் மட் டுமே கேட்டது. மற்ற வார்த்தை கள் தெளிவாக இல்லை. திடீ ரென்று பிரசங்கி கத்தினார்.

குணம்...குணம்...குணம்...ஏய் சிறுவனே, ஊன்றுக் கட்டையை உதறி விட்டு நடந்துவா என்று உத்தரவு போட்டார். கட்டையைக் கீழே போடும் சத்தம் கேட்டது. மீண்டும் பிரசங்கியின் சத்தம் திக்குவாய் மனிதனே! இப்போது உரக்க பேச... நாங்கள் கேட்க வேண்டும் என்றார்.

அவன் முன்னைப்போலவே திக்கித் திக்கியே கத்தினான் அய்யோ! அந்தப் பையன் எம்மேல விழுந்துட்டான் என்று குளறிக் குளறிக்கத்தினான் அரங்கத்தில் இருந்தோர் பிரசங்கியைப் பார்த்துக் கேலிச்சிரிப்புச்சிரித்தனர்.

சிலர் அவனை அடிக்க ஓடிவந்தனர். பிரசங்கியோ சேசுவே சேசுவே என்று கூவிக்கொண்டே பயத்தால் ஓடினார்.

******************

கிறித் துவர் கள் தங் கள் கல்லறை யைக்கட்டுவதற்குக் கல்லறைத் தோட்டத் தில் இடம் வாங்குவார்கள். அங்கே விலை மிக அதிகம் அப்படி அதிக விலையில் கல்லறைக்கான இடம்வாங்கித் தம் மாமியா ருக்குக் கொடுத்தான் ஒரு மருமகன் மாமி யார் மனம் மகிழ்ச்சியில் மலர்ந்தது.

அன்று அவளின் பிறந்த நாள். மறு ஆண்டு பிறந்த நாளில் மருமகனின் பரிசை எதிர்ப்பார்த்துக் காத்திருந் தாள்.

மருமகன் ஒன்றும் தரவில்லை மாமியார் முகத்தைத்தூக்கி வைத் துக்கொண்டு முணு முணுத்தார். புரிந்து கொண்ட மருமகன் வெடுக் என்று கூறினான் போன வருசம் கொடுத்த பரிசை நீங்கள் பயன் படுத்திக்கொள்ளவே இல்லையே! அப்புறம் இந்த வருசம் எப்படிக் கொடுப்பது? என்றான்.

******************

பாதியாரிடம் ஆணும் பெண்ணுமாக இருவர் வந்து திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று கேட்டனர்.

உடனே பாதிரி மதவழக்கப்படி அவர் களுக்குச்செய்யவேண்டிய போதனைகளைக் கூறுவதற்காக அவ க்கு வருமாறு அழைத்தார்.

திருமணம் இறைவனால் நிச்சயிக் கப்படும் புனிதமான சடங்கு அதனைச் செய்து கொண்டவர்கள் அதனை மதித்து கட்டுப்பட்டு வாழ்நாள் முழு வதும் சேர்ந்தே இருக்கவேண்டும் திரு மண பந்தத்தைப் பிரிக்கவோ முறிக் கவோ கூடாது என்று அறிவுரைகூறும் ஒரு சடங்கு அது.

மணமகன், மணமகள் இருவரும் ஒரே குரலில் கூறினா இந்தச்சடங்கு எங்களுக்குத்தேவையில்லை. ஏன் அப்படிக்கூறுகிறீர்கள்? என்று கேட் டார்.

நாங்கள் ஏற்னகவே பல முறை திருமணம் செய்து கொண்டு பழக்கப் பட்டவர்கள் என்றனர் மணமக்கள் பாதிரிக்கு மயக்கம் வராத குறைதான் இறைவன் போட்ட முடிச்சை அவிழ்ப் பதும் மறுப்பதும் கிறித்துவர்களிடம் சகஜமாகிவிட்டதே!

தரவு: ரீடர்ஸ் டைஜஸ்ட்

# ஜப்பானியர்கள் தடையை மீறி தொடர்ந்து திமிங்கல வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர்

திமிங்கல வேட்டை கட்டுப் பாட்டு சர்வதேச ஆணையத்தின் வருடாந்த கூட் டம் மொரொக்கோ நாட்டின் அகதிர் நகரில் நடக்கிறது.

அடுத்த பத்து ஆண்டுகளுக்கு திமிங்கலம் பிடிக்கும் தொழில் துறையை ஒழுங்கு செய்யக்கூடிய ஒரு ஒப்பந்தம் பற்றி இக்கூட்டத்தில் விவாதிக்கப்படுகிறது. திமிங்கலம் வேட்டையில் ஈடுபடும் நாடுகளும் திமிங்கலம் பிடிக்கப்படுவதை எதிர்க்கும் நாடுகளும் சுற்றாடல் பேணல் ஆர்வலர் குழுக்களும் இது பற்றி விவாதிக்கின்றன. திமிங் கல வேட்டை உலகில் முற்றும் முழுதுமாக முடிவுக்கு வரவேண் டும் என்று பிரிட்டன், ஆஸ்திரே லியா, நியூசிலாந்து மற்றும் வேறு பல நாடுகளும் விரும்புகின்றன.

ஆனால் திமிங்கலங் கள் பிடிக்கப்படு வதை முடிவுக்கு கொண்டு வருவது என்பது அரசியல் ரீதியில் சாத்தியமா என்ற கேள்வியை இவர்கள் எதிர்நோ க்குகின்றனர். முடி வுக்கு கொண்டு வருவது சாத்தியம் இல்லை என்றே கூட சிலநாடுகளும் கிரீன் பீஸ், வொர் லட் வைல்ட்லை ஃப் பெடரேஷன் உள்ளிட்ட பசுமைக்குழுக்களும் அறிவித்துள்ளன. மாறாக ஜப்பான் வேட்டையாடும் திமிங்கலங்களின்




எண்ணிக்கை குறைய வேண்டும் திமிங்கல வேட்டையின் சுற்றாடல் தாக்கங்கள் பற்றி தொலைநோக்கு பார்வையாடு அணுக வேண்டும் திமி ங்கல இறைச்சி வர்த்தகம் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்ற நோக்கங்களில்தான் ஒப் பந்தம் ஒன்றை எட்ட தாங்கள் விரும்புவதாக இவை தெரிவிக் கின்றன.




திமிங்கல வேட்டையை எதிர்த்து ஆஸ்த்ரேலியாவில் நடந்த நூதன போராட்டத்தில் திமிங்கல வடிவத்தில் மனிதர் கள் குழுமி நிற்கின்றனர்.

இந்த வியங்கள் நடந் தாலே தற்போதைய நிலவர த்தை விட கணிசமான அளவில் மேம்பட்ட சூழல் ஒன்று ஏற்படும் என்று இவை கருதுகின்றன.

ஆனால் இந்த வாதத்தைக் கேட்டு மற்ற ஆர்வலர்கள் கவலை யும் அச்சமும் வெளி யிடுகின்றனர்.

இது போல் பேசினால் கடந்த இருபத்து நான்கு ஆண்டுகளாக உல களாவிய அளவில் அமலில் இருந்து வரும் திமிங்கல வேட்டை மீதான நிறுத்திவைப்பு உடன்பாடு அகன்று போகும் ஐஸ்லாந்து, ஜப்பான், நோர்வே போன்ற நாடுகள் தற்போது திமிங்கல வேட்டையில் ஈடுபடு வத ற்கு அங்கீகாரம் கிடைத்துவிடும் என்று இவர்கள் வாதிடுகின்றனர்.

இந்நிலையில் இந்த யோசனைகள் ஒப்பந்தமாக மாறுமா என்பது சந்தேக மாகவே இருக்கிறது.

கூட்டத்தில் பேச்சுவார்த்தைகள் காரசார வாக்குவாதங்களுக்கு பஞ்ச மில்லாமல் இறுதிக்கட்டம் வரை இழுத்துக்கொண்டு போகும் என்றே தெரிகிறது.

# லண்டன் காரைக்கதமபம் 2010 தொடர்ச்சி







காரை நகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம்

# ரஷ்யாவில் காடுகள் எரிகிறது பாகிஸ்தானில் வெள்ளப்பெருக்கு



ரஷ்யா மொஸ்கோ நகரை அன்டிய காடுகள் கடும் வெப்பம் காரணமாக எரியத்தொடங்கி இப்போது தணிந்து வருகின்றது. இதனால் மொஸ்கோ நகரமே புகை மண்டலாக காட்சி அளித்ததோடு மக்களின் இயல்பு நிலையும் பாதிப்படைந்தது. மேலும் ரஷ்சிய பிரதமர் ஸிஷடிமிர் புடின் அவர்கள் தீயணைப்பு படைவீரர்களுடன் இணைந்து தீயணைப்பு வேலையில் ஈடுபட்டு கொண்டமை குறிப்பிடத்தக்கது. பாகிஸ்தானில் தொடர் மழையால் இது வரை 40 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

லட்சக்கனக்கான மக்கள் தங்கள் கிராமங்களை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு செல்கின்றனர். இதுவரை 1600பேர் வரை பலியாகியுள்ளனர் சாவு எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது. தொடர்ந்து ஐ/நா. பாக்கிஸ்தான் மக்களுக்கு உதவ சிறப்பு ஏற்பாடுகளை செய்துவருகிறது.

## வெளிநாடு என்ற போர்வையில் பாதிக்கப்பட்ட ஒரு பாவியின் உள்ளக்குமுறல் இங்கே.!

# வேண்டாம் வெளிநாடு

என்ன வளம் இல்லை எங்கள் தாய்த் திருநாட்டில், இனி வரும் காலத்தில் ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்..? என்ற கோட்பாட்டை புரிந்து கொண்டேன் இன்று தான். என்னைப் போல் ஏமாறும் நண்பர்களுக்காக இந்த சொந்தக் கதையான எனது சோகக் கதையை உங்களிடம் பகிர்ந்து கொள்வது எனது மனதிற்கு திருப்தியாக இருக்கும் என நம்புகிறேன்.

இந்து சமுத்திரத்தின் நித்திலம் எனும் இலங்கை என்ற திருநாட்டில் யாழ்ப்பாணம் எனும் இடத்திலிருந்து 25KM இல் அமைந்துள்ள சைவமும் தமிழும் தழைத்தோங்கும் கல்வியும் வியாபாரமும் சிகரமாய் அமைந்த காரைநகரிலே நான்கு சகோதரர்கள் மத்தியிலே மூத்த புதல்வனாக பிறந்த நான் இந்நாட்டில் ஏற்பட்ட போர் என்ற கொடிய பாதகனாலும் அதன் விளைவினாலும் இலங்கையின் பல பாகங்களுக்கும் அகதியாகச் சென்று பல பாடசாலைகளில் கல்வியினைக்கற்று முடித்த பின் மீண்டும் எனது சொந்த ஊரான காரைநகருக்கு மீள் குடியமர்ந்தேன். நான் முச்சக்கரவண்டி ஓட்டுதலை எனது தொழிலாகக் கொண்டிருந்தேன்.

இளமை துள்ளியெழுந்து நின்று காதல் வந்தது. அதனால் இதே இடத்தைச்சேர்ந்த பெண்ணை வாழ்க்கைத் துணைவியாக ஆக்கிக் கொண்டேன். சிறிது காலத்தில் எமக்கோர் ஆசைப் பெண் செல்வத்தை அடைந்து இன்பக் களிப்பினில் நன்றாக இல்லறம் நடாத்தி வந்தேன். அச் சமயத்தில் அள்ளி வழங்கக் குறையாத, வற்றாத செல்வமும் எம்முடன் ஏழேழு ஜென்மங்கள் தொடர்ந்து வரும் செல்வமும் ஆகிய கல்விச்செல்வத்தை கனடா வாழ் மணவச் செல்வங்களுக்கு வாரி வழங்கும் ஆசானாகிய எனது பெரிய தந்தையாரினால் நான் தொலைபேசி என்ற தூதுவன் மூலம் உரையாடி மற்றையவர்களைப் போலவே என்னை யும் வெளிநாடு செல்வதென்ற உந்துதலுக்கு உள்ளாக்கப்பட்டு எனது சம்மதத்தையும் வாங்கும்படி ஓர் ஆசை மோகத்திற்கு உள்ளாக்கப்பட்டேன். மேற்கொண்டு எனது மனைவியின் வீட்டாரிடமும், உற்றார், உறவினரிடமும் கையேந்தி ஒரு பெருந்தொகைப் பணத்தைப் பெற்றுக்கொண்டேன். அந்தப்பணத்தை எவ்வித சிந்தனையும் இன்றி சட்டவிரோதமாக வெளிநாட்டுக்கு அனுப்பும் முகவர் மூலம் மூன்று தடவைகள் நாட்டைவிட்டு வெளியேறி சில நாடுகளில் பல நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டு பின்னர் மீண்டும் எனது தாய்த் திருநாடான இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டேன். ஆன்றோர் கூறிய பழமொழியான "இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை" என்பதன் விளக்கத் தன்மையை நான் புரிந்து கொண்டேன் மிகத்தெளிவாக. வேண்டாம் வெளிநாடு என்று தாய் நாட்டிலே தொழில் செய்வதென்று தீர்மானித்தேன். ஆனால் எனது தலைவிதியோ வேறுவிதமாக அமைந்தது. உழைத்து நானும் ஒரு நான்கு பேர் மத்தியில் மனிதனாக உயர்வதற்கு இரண்டு காரணங்கள் தேவை ஒன்று மூளை. மற்றையது முதலீடு. ஆனால் என்னிடம் மூளை நன்றாக உள்ளது. முதலீடு தற்சமயத்திலே இல்லை. முதலீடு என்ற கொடிய நோயான பணத்தினை மீண்டும் சிறிது காலத்தில் தருவதாக வாக்குறுதியளித்துக் கூறினார் எனது பெரிய தந்தையார். நயவஞ்சகம் கொண்ட எனது தந்தையார் பணத்தினாலே எந்தவொரு காரியத்தையும் வென்று விடலாம் என்ற எண்ணத்தை தனது மந்திரமாகக்கொண்டவர். இவர் பணத்தை எனக்கு வழங்க வேண்டாமென்று தனது சகோதரர் ஆகிய எனது பெரிய தந்தையாரிடம் கூறிக்கொண்டார். காரணம் நான் அவரைவிட முன்னேறி விடு வேன் என்ற பொறாமையினால் தான். இதனால் மனம் நொந்து போன என்னை "மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல" தொப்பிள் கொடி உறவான தாய் வீட்டாரினாலும் தாலிக்கொடி உறவான மனைவி வீட்டாரினாலும் "தண்டச்சோறு" என பட்டம் கொடுக்கப்பட்டு புறந்தள்ளப்பட்டு காரைநகர் பிரதான வீதி மணற்காடு எனும் இடத்தில் அமைந்துள்ள விட்டோர் சங்கத்தில் எனது சக நொந்து போன நண்பர்களுடன் வாழ்ந்து வருகின்றேன்.

"காலை எழுந்தவுடன் படிப்பு கனிவு கொடுக்கும் நல்ல விளையாட்டு" என்று சிறு வயதில் கல்வி கற்ற நான் தற்பொழுது குடும்ப நிலைக்கசப்பை கருத்தில் கொண்டு "காலை எழுந்தவுடன் கசிப்பு பின்பு கனிவு கொடுக்கும் நல்ல சுருட்டு மாலை முழுதும் மப்பு இதை வழக்கப் படுத்தும் வப்பு" என்ற கோட்பாட்டினை எனது தாரக மந்திரமெனக் கொண்டு இக்காலத்தைக் கழித்து வருகின்றேன்.

பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும் என்பது தற்போதைய காலத்தில் மெய்யாக உள்ளது. அதற்காக ஏமாற்ற நினைக்கும் போலிகள் என் போன்ற பாவிகளின் பணத்தினைத் திரட்டி ஆடம்பர வாழ்க்கை நடாத்தி எங்களை தெருவில் அலைய விட்டு வேடிக்கை பார்த்து ரசிப்பது உங்கள் மனச்சாட்சிக்குச் சரியென என்று தெரிகின்றதா? நீங்கள் எங்களை விட வயதிலும் அனுபவத்திலும் உயர்ந்தவர்கள் தானே? ஒரு கணம் எமக்காகத்தயவு செய்து இதே இடத்தில் உங்களை நிறுத்தி சிந்தித்துப் பாருங்கள். ஆனால் நான் சொல்கின்றேன். "பசு மாடு அடித்து நாம்பன் மாட்டுக்கு கொடுத்த கதையாக" முடிந்துவிட்டது. "எட்டடுக்கு மாளிகையில் ஏறியிருந்த என்னை வெறுந்தரையில் இறக்கி விட்டாரே" என்பதற்காக பெற்றவன் கைவிடலாம் உற்றவன் கைவிடலாம் ஆனால் என்னைப்படைத்த அந்த இறைவன் ஒரு போதும் கைவிடமாட்டான். ஒரு மனிதன் வாழ்க்கையில் அனுபவிக்கக்கூடாத சூது, பிராடு, முள்ளமரித்தனம், முடிச்சவிக்கி, குறுளி இந்த நிலைக்கு இனி எந்த ஒரு அப்பாவிகளும் ஆளாகக் கூடாது யாரையும் நம்பி ஏமாற்றம் அடைய வேண்டாம் எனப் பணிவாகக் கேட்டுக்கொண்டு உங்களிடம் இருந்து விடைபெறுகின்றேன். வெளிநாட்டுக்கு போய் எனது பணத்தை ஏமாற்றி உறவுகளால் கைவிடப்பட்ட ஒருவன்.

நன்றி

இங்ஙனம்
உண்மையுள்ள

| | |
|---|---|
| முழுப்பெயர் | :- பரமலிங்கம் கஜமுகன் |
| வயது | :- 24 |
| விலாசம் | :- புது றோட் காரைநகர் |
| தொழில் | :- மதுபோதையில் நாட்களைக்கழித்தல் |
| தொ.பே | :- 077340486 |

குறிப்பு :-

மேலே குறிப்பிட்டு விளக்கப்பட்டுள்ள இந்த சோகக்கதையை நானே எனது சொந்த வசனநடையில் எழுதினேன். இதனால் இதனைப்பிரசுரிப்பதனால் வரும் விளைவுகளுக்கு புது றோட், காரைநகரைச் சொந்த முகவரியை உடைய பரமலிங்கம் கஜமுகன் ஆகிய நானே பொறுப்பு என்று உறுதிப்படுத்திக் கொள்கின்றேன்.

நன்றி

# ஆடிவேல் விழா கொழும்பில் மிகக்கோலாகலமாக ஆரம்பம்...!

ஆடிவேல் விழா கொழும்பில் மிகக் கோலாகலமாக ஆரம்பம்...! கொழும்பில் நீண்ட நாட்களுக்குப்பின்னர் ஆடிவேல் விழா மிகக் கோலாகலமாக ஆரம்பித்துள்ளது.

ஜூலை 27ஆம் திகதி வரை நடைபெறும் ஆடிவேல் விழாவின் ஆரம்பமாக கொழும்பு முதலாம் குறுக்குத்தெரு சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் காவடி ரதபவனி நேற்று காலை 8.00 மணியளவில் ஆரம்பமாகி பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் ஆலயம் வரை சென்றது. பெருந்திரளான பக்தர்கள் புடைசூழ சென்ற ரதபவனி அலரிமாளிகையில் விசேட பூஜைக்காகத் தரித்து நின்றது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பாரியாரும் மாளிகைக்கு முன்பாக மேள தளத்துடன் அழைத்துவர அவர்கள் காலி வீதியில் வைத்து விஷேட பூஜைகளை நடத்தினர். ஆடிவேல் விழாவில் இவ்வாறு ஜனாபதி விஷேட பூஜை வழிபாடு நடத்தியது இதுவே முதற்தடவையாகும் அங்கு ஜனாதிபதிக்கும் அவரது பாரியாருக்கும் ஆலய அறங்காவலர் சபையினர் பொன்னாடையும் மலர்மாலையும் அணிவித்துக்கௌரவித்தார்கள் மேலும் செட்டியார்தெரு ஸ்ரீ புதிய கதிரேசன் ஆலயத்தின் வெள்ளி ரத பவனி (24) காலை 7.30 அளவில் ஆரம்பித்து பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் ஆலயத்தைச்சென்றடைகிறது.

சம்மாங்கோடு ஆலய காவடி ரதம் திங்கட்கிழமை (26) திரும்பி வரவுள்ளநிலையில் வெள்ளி ரதம் 27 திங்கட்கிழமை மீண்டும் செட்டியார் தெரு ஆலயத்தை வந்தடையும்.





# கனடா காரை வசந்தம் 2010 ஒன்றுகூடல்



# மரண அறிவித்தல்



## திரு.துரைராஜா ராஜேந்திரம்

(காரைநகர்)

**தோற்றம்: 28.09.1971 மறைவு: 02.06.2010**

காரைநகர் செம்பாட்டைப் பிறப்பிடமாகவும் எட்யாந்தோட்டையை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்பொழுது கனடாவில் (Markham) வசித்தவருமாகிய துரைராஜா ராஜேந்திரம் அவர்கள் 02.06.2010 புதன்கிழமை அன்று அகால மரணமானார். அன்னார் காலஞ்சென்ற வர்களாகிய துரைராஜா-வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் இளைய மகனும் வினித்தாவின் அன்புக் கணவரும் பிரவீன், அபிரா ஆகியோரின் பாசமிகு தந்தையும் மயில்வாகனம் (எட்டியாந்தோட்டை), கந்தசாமி (உடையார்) ஆகியோரின் பேரனும் முருகுப்பிள்ளை, சிறீஸ்கந்த தேவியின் பாசமிகு சகோதரனும் சற்சொருபதேவி, புஸ்பராணி, விஜயரட்ணம், வைகுந்தன் ஆகியோரின் மைத்துனரும் வாசுகியின் அன்புச்சகோதரரும் மேகலா, அசன், வினோத், வினோசன், வினோபா, கவிசா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிரியா, முரளி, தினேஸ், தர்சன், தனுஸ், கஜன் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

தகவல்: மனைவி (வினித்தா),
பிள்ளைகள் 905-5543176
வைகுந்தன் (மைத்துனன்) 416-8804889

# மரண அறிவித்தல்



## திரு.சின்னத்துரை பரமேஸ்வரன்

(Banker) (Canada Post)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் காரைநகர்,தங்கோடையை வதிவிடமாகவும் கனடாவில் வாழ்ந்து வந்தவருமாகிய (Banker) என்று அழைக்கப்படும் திரு.சின்னத்துரை பரமேஸ்வரன் அவர்கள் 22.07.2010 வியாழக்கிழமை அன்று கனடாவில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-வள்ளியம்மை (லிங்கம் ஸ்ரோஸ், நெடுங்கேணி) தம்பதிகளின் அன்பு மருமகனும் சறோஜினிதேவியின் அன்புக்கணவரும் சுகந்தினி, பிரதீபா (லண்டன்), ராதிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் வைத்திய கலாநிதி மனோதீதன் (லண்டன்) அன்பு மாமனாரும் கமலச்சந்திரன் (கனடா), காலஞ்சென்ற மகேஸ்வரன், சரஸ்வதி (அவுஸ்திரேலியா), வைத்தீஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரனும் தேவீஸ்வரி, மகேஸ்வரி, காலஞ்சென்ற செல்வரத்தினம், சகுந்தலாதேவி, தர்மலிங்கம், சுந்தரலிங்கம், பாக்கியரட்சுமி, மகாலிங்கம், ரதிதேவி, பத்மசோதி, தனலட்சுமி, அமிர்தலிங்கம்,கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுபானனின் அன்புப் பேரனும் ஆவார்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்
(905) 4534656

# மரண அறிவித்தல்



திரு. ஐ.தி.சம்பந்தன்
அவர்களின் அன்பு மனைவியார்

## திருமதி செல்லம்மா சம்பந்தன்

குாரைநகரைப்பிறப்பிடமாகவும் இலண்டன் - ஈஸ்றகாமை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா (செல்வதி) சம்பந்தன் 27.05.2010 அன்று இலண்டனில் சிவபதம் அடைந்தார். அன்னார் ஐ.தி.சம்பந்தனின் அன்பு மனைவியும் ஞானவடிவேல், ஞானானந்தன், ஞானலிங்கம் ஆகியோரின் பாசமிகு தாயாரும் கௌசல்யா, பகீரதி, மலர்விழி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். இறுதிக்கிரியைகள் 30.05.2010 ஞாயிறு அன்று காலை 9.30 மணியளவில் Whitta Road Manor Park, Essex, E12 5DAஇல் உள்ள கூட்டுறவு பொது மண்டபத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் 12 மணிக்கு City of London Cermatorium, Aldersbrook Road, London, E12 5DQ நடைபெற்றது.

தொடர்புகளுக்கு: ஐ.தி.சம்பந்தன்
44 208552 6992, 44 785295 0089
ஞானவடிவேல்: 442085504155
ஞானவடிவேல்: 442085504155

# மரண அறிவித்தல்




## தம்பிராஜா விஸ்வலிங்கம்

காரைநகர் ஆயிலியை பிறப்பிடமாகவும் கனடா Scarboroughவை வதிவிடமாகவும் கொண்ட இளைப்பாறிய மாத்தளை St.Thomas ஆசிரியர் தம்பிராஜா விஸ்வலிங்கம் அவர்கள் May மாதம் 9ஆம் திகதி Scarboroughவில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற மகாலட்சுமி P.W.D ஓவசியர் தம்பிராஜா, சுந்தரி ஆகியோரின் அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்ற கிச்சி வேலுப்பிள்ளை பார்வதிபிள்ளை அவர்களின் பாசமிகு மருமகனும் அன்னார் காலஞ்சென்ற திருமங்கலத்தின் அன்பு சகோதரரும் காலஞ்சென்றவர்களாகிய கனகரத்தினம், நடராஜா, தம்பையா, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் தற்பொழுது Australiaவில் வசிக்கும் கணபதி, ராமகிருஷ்ணன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். இவர் இந்திரா (கனடா), சந்திர குமார் (லண்டன்), விஜி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகேஸ்வரிமுத்துசாமியின் வளர்ப்புத்தந்தையும் ஆவார். பாலசந்திரன் (ஆஸ்திரேலியா), சக்திவேல் (கனடா), தயாபரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் சிறிய தகப்பனாரும் அன்னார் ஜெயானந்தன் (கனடா), றீபா (லண்டன்), தயாளன் (கனடா), ஞானலிங்கம் (லண்டன்), கணேசலிங்கம் (ஆஸ்திரேலியா), சண்முகலிங்கம் (ஆஸ்திரேலியா), ஜீவா (ஆஸ்திரேலியா), மீனா (கனடா) ஆகியோரின் மாமனாரும் மயூரன், நிருபா, பிருந்தா, அர்ச்சுனன், தர்ஷினி, ஆஷினி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 3280 Sheppard Avenue Eastஇல் இருக்கும் Highland Funeral Homeஇல் May 15ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5-9மணி அளவில் பார்வைக்காக வைக்கப்பட்டு ஞாயிறு காலை அதே மண்டபத்தில் 8-1மணி அளவில் பார்வைக்காக வைக்கப்பட்டு பின் Bowman villeஇல் உள்ள மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்: இந்திரா (கனடா) (416) 495-8054
விஜி (கனடா) (461)283-6050

# மரண அறிவித்தல்



## திரு.இராசையா ஆனந்தராஜா

காரைநகர் மணற்பிட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடா ஸ்காபரோவில் வசித்தவருமான இராசையா ஆனந் தராஜா 02.08.2010 திங்கட்கிழமை அன்று அகால மரணமானார். அன்னார் இராசையா -பார்வதி தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற ஆ.யு.கந் தையா, யுகனேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் சந்திரசூரிய இந்திராணியின் (சந்திரா,பவளம்) அன்புக்கணவரும் சாலினி (கனடா), ஜனார்த்தனன் (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவானந்தன் (லண்டன்), சர்வானந்தன் (லண்டன்), சற்குணராசா (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் காரை நகர் உருத்திரபுரத்தைச்சேர்ந்த சந்திராதேவி, சந்திரேஸ்வரி, சந்திரகுமார், சந்திரகுமாரி, காலஞ்சென்ற சந்திரசூரியா, சந்திரசூரியகாந்தி, சந்திரசூரியகுமார் (சூரி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

தகவல்: மனைவி, பிள்ளைகள். 4163321682

# மரண அறிவித்தல்



## திருமதி சுப்பிரமணியம் செல்லமுத்து

**பிறப்பு: 06.10.1922 இறப்பு: 14.06.2010**

காரைநகர் பாலாவோடையைப்பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமாகிய சுப்பிரமணியம் செல்லமுத்து அவர்கள் 14.06.2010 திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா (சுப்பிரமணியம் (பாலத்துறை) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கனகரட்ணம் ராசலிங்கம், யோகேஸ்வரி, சண்முகசுந்தரம் (செல்லமுத்து நெல்லயடி, SR Tex, கொழும்பு), சபாநாயகம் (செல்லமுத்து மருந்தகம், சுண்ணாகம்), இராஜேஸ்வரி (கனடா), மகாதேவன் (இலண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும் சரஸ்வதி, ருக்மணிதேவி, நாகேந்திரன், சுகந்தி, ஞானதேவி, ஏகாம்பரம் (கனடா), ஜெகதீஸ்வரி (இலண்டன்) ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 15.06.2010 செவ்வாய்க்கிழமை அன்று காலை 7.00 மணிமுதல் மாலை 5.00 மணி வரை இல 28D, மல்லிகா வீதி, வெள்ளவத்தையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் 16.06.201 புதன்கிழமை அன்று இறுதிக்கிரியைகள் யாழ் நெல்லியடி இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3.00 மணியளவில் ஆலங்கட்டை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு:
சண்முகசுந்தரம்-இலங்கை
செல்லிடப்பேசி: +94777792963
மகாதேவன்-பிரித்தானியா
செல்லிடப்பேசி: +447799402877
இராஜேஸ்வரி-கனடா தொ.பே: +14167432755

# மரண அறிவித்தல்




## ஐயாத்துரை விநாயகமூர்த்தி

(களபூமி, காரைநகர்)

காரைநகர் களபூமி வழுப்போடையை பிறப்பிடமாகவும் விளானை களபூமியை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப் பிள்ளை ஐயாத்துரை விநாயகமூர்த்தி அவர்கள் 22.06.2010 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை விநாயகமூர்த்தி 22.06.2010 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை மாரிமுத்து தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான சின்னையா பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகனும் ஐ.தி.சம்பந்தனின் அன்புச்சகோதரனும் இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும் தவமலர், உதயமலர், கமலமலர் ஆகியோரின் அன்புத்தந்தையும் வைத்தீஸ்வரன், உருத்திரராஜன், கனகலிங்கம் ஆகியோரின் மாமனாரும் தனுஷி, ஜெசிக்கா, ஒலிவியா, அக்சிந்தன் ஆகியோரின் பேரனும் T.K.கந்தசாமி, T.K.நடராசா, T.K.முருகேசு ஆகியோரின் பெறாமகனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.06.2010 வியாழக்கிழமை வழுப்போடை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் களபூமி தில்லை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மக்கள், மருமக்கள்,
வழுப்போடை, களபூமி, காரைநகர்.

# மரண அறிவித்தல்



## சுந்தரேஸ்வரன் சண்முகம்

(வசந்தன் மாஸ்ரர்) மாப்பாணவூரி, காரைநகர்.

காரைநகர் மாப்பாணவூரியை பிறப்பிடமாகவும் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட சுந்தரேஸ்வரன் சண்முகம் (வசந்தன் மாஸ்ரர் Yarl Central College) ஆனி 08.2010 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம், தாட்சாயினியின் சிரேஸ்ட புதல்வரும் காலஞ்சென்ற மகாநந்தன் மற்றும் சிவனேஸ்வரியின் மருமகனும் ஜெயந்தியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற வர்ணணி மற்றும் ரதிவதனி, ஜெயஅமுதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிர்மளா, வசந்தராணி, காந்திமதி, உமாதேவி, செல்வராணி, அமுதராணி, இராஜகோபால், மகாலட்சுமி ஆகியோரின் அருமைச்சகோதரனும் காலஞ்சென்ற அழகேந்திரன் மற்றும் பிரேமச்சந்திரன், சாந்தினி, சிவானந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் தட்சணாங்குளம் மயானத்தில் வியாழக்கிழமை ஆனி 10 2010இல் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

தகவல்: சிவானந்தன் (905) 471 3960
இராஜேகோபால்: (519) 721 9634

# சூரிச் மாநகரில் காரைநகர் மக்களின் 3ஆம் திருவிழாவும் ஸ்ரீ விஷ்னு துர்க்கை அம்மன் தேர்த்திருவிழாவும் மகோற்சவமும்.













# லண்டனில் பழைய மாணவர் சங்கம் உதயம்

கடந்த மாதம் 2010 பாலாவோடை பாடசாலை பழைய மாணவர்களும் சுந்தரமூர்த்திநாயானார் பழைய மாணவர்களும் ஒன்றினைந்து பழைய மாணவர் சங்கம் ஒன்றை உருவாக்கியுள்ளனர். இதற்கான சம்பிரதாய முதற் கூட்டம் கடந்த 22.08.10 ஞாயிற்றுக்கிழமை மாலை இறை வணக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டு புதிய நிர்வாகக்குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது. பழைய மாணவர்சங்கத்திற்கான தலைவராக திரு.சு.சரவணபவான் அவர்களும் செயலாளராக திரு.எஸ்.சிவாமகேசன் அவர்களும் பொருளாளராக திரு.எஸ்.ஞானப்பிரகாசம் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டதோடு நிர்வாகக்குழு உறுப்பினர்கள் இருபிரிவாக இருபாடசாலைகளின்நலன்கள் கருதி உருவாக்கப்பட்டுள்ளது. இதன்படி சுந்தரமூர்த்தி நாயனார் பாடசாலை சார்பாக திரு.எஸ்.பரமேஸ்வரன், திரு.எஸ்.ரகு, திரு.பிரபாகரன் திருமதி மார்கண்டு அவர்ளும் தெரிவு செய்யப்பட்டதோடு பாலாவோடை தமிழ் கலவன் பாடசாலை சார்பாக திரு.எஸ்.யோகராசா அவர்களும் திரு.எஸ்.சர்வானந்தலிங்கம் அவர்களும், திரு.க. வரதராசா அவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேற்படி சங்கம் விரைவில் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

# காரைநகருக்கான பொதுநூலகம் விரைவில்...!!!

காரைநகருக்கான பொதுநூலக ஆரம்ப வேலைத்திட்ட பணிகள் குறித்து புலம்பெயர் நாடுகளில் காரை வாழ் மக்கள் ஒன்று கூடி விரைவான திட்டத்தை மேற்கொண்டுள்ளனர். இதன்படி லண்டனில் ஒன்று கூடப்பட்ட நூலகவிடையம் சம்பந்தமான பொதுக்கூட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளதோடு அதன் ஒருங்கினைப்பாளராக நடராஜா ரவிந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் இப்பொதுக்கூட்டத்திற்கு சமூகம் கொடுத்தவர்கள் பெருந்தொகை நிதியை (22,000 பவுண்ஸ்) அன்பளிப்பும் செய்துள்ளனர். இதே போல் மற்றைய நாடுகளிலும் இதன் பணி தொடர்கிறது.


Basel/Region 3

Wurde Familienvater wegen Babygeschrei erstochen?

# கத்திக்குத்துக்கு இலக்காகி ஒருவர் மரணம்

கடந்த மாதம் பாசெல் மாநகரில் (BL) தமிழ் குடும்பஸ்த்தர் ஒருவர் துருக்கி நாட்டைச்சேர்ந்த துருக்யியர் ஒருவரால் கத்திக் குத்துக்குள்ளாகி மரணமாகியுள்ளார். மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் குழந்தைகளின் சத்தம் துருக்கி குடும்பஸ்த்தருக்கு இடையூறு விழைவித்தன் நிமித்தம் இருவருக்கும் ஏற்படட சர்ச்சை கத்தி குத்தில் போய் முடிந்துள்ளது முள்ளியவளைச்சேர்ந்த இவர் (வயது 45) சுவிஸில் 20 வருடமாக வாழ்ந்து வந்தவர். கடைசிப்பிள்ளைக்கு வயது இரண்டு

(28.08.2010) சம்பவம் நடந்த நேரம் இவர் பிள்ளை மனைவி சகிதமாக வீதியில் நடமாட வந்த வேளை இரவு 11.00 மணியளவில் காத்திருந்து குத்தப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.



# கண்ணீர் அஞ்சலி



## Dr. யமுனா மார்க்கண்டு

**MBBS, MD, MRCP (UK)**
**(MILTON KEYNES HOSPITAL-UK)**

காரைநகர், பாலாவோடையினைப்பிறப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்து வந்தவருமாகிய Dr.யமுனா மார்க்கண்டு 18.08.2010 புதன்கிழமை லண்டனில் காலமானார். அன்னார் மார்க்கண்டு (இளைப்பாறிய கணக்காளர், நீர்ப்பாசனத்திணைக்களம்), சிவபாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் மனோகரி (Former, HnB), மாலினி (KMS-LONDON), கேதீஸ்வரி (LONDON), யாழினி (CANADA) ஆகியோரின் அன்புச்சகோதரியும் இராமச்சந்திரன் (EXPRESS CARGO, COLOMBO), சுகந்தன் (KNOW LEDGH MANAGE MENT SYSTEM - LONDON), சயந்தன் (LONDON), திலகேசன் (CANADA) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் வசீகரன் (S.T. THOMAS COLLEGE, M.T.LAVINIA), ஆரணி (LONDON), ஹரினி (-LONDON), கிருஷான் (CANAD) ஆகியோரின் அன்புப்பெரியம்மாவும் ஆவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திரு.திருமதி மார்க்கண்டு தொ.பே: 0112505713
No. 16, 4/4, 1st Chapel Lane, Wellawatta, Colombo-06.

# மனதை கவர்ந்த பிரான்ஸ் கலை விழாவின் தொடர்ச்சி





